மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-XII.	Madras: February 1910.	No-2.
புத்தகம் - கஉ.	சென்னப்பட்டணம்: பிப்ரவரி 1910.	இலக்கம்-2.

தஞ்சாவூரிலுள்ள நந்தி.

நிலவள நீர்வளம் பொருந்தியதும், கல்வி கேள்விகளிற் பூரணமடைந்த கோடிக்கணக்கான சான்றோர்க் குறைவிடமானதும், காவிரிநதி பாயப்பெற்ற புண்ணிய பூமியாகிய இத்தென்னிந்தியாவிற்குத் திலகம்போன்றதான சோழநாட்டின்கண் தஞ்சைமாநகர மொன்றுளது. தென்னிந்தியாவின் நெற்களஞ்சிய மென்னப்படும் தஞ்சாவூர் ஜில்லாவுக்கு முக்கிய பட்டணமாயும், வெகு காலம் மகாராஷ்டிர சிங்கங்களா லாளப்பட்டுவந்த இப்பெரிய நகரத்தில் ஒரு பெரிய கோயிலுண்டு. தஞ்சைக்குப் புதிதாய் வரும் அனேக கனவான்களும் ஐரோப்பியர்களும் இவ்வாலயத்துட் சென்று ஆங்கிருக்கும் பெரிய நந்தியையும் உன்னதமான கோபுரத்தையுங் கண்டுகளித்துப்போவது வழக்கம். மேற்சொன்ன அந்நந்தியைப்பற்றி கர்ண பரம்பரையாக நமக்கு வந்துள்ள அநேக கதைகளுள. அவை பின் வருமாறும்.

முற்காலத்தில் தன்னுடைய சதுரங்க சேனையுடன் விடாது சென்று இமோத்கிரியில் தனது வெற்றிக்கொடியை நாட்டிய வரிசிலை மன்னனாகிய கரிகாற் சோழன் குட்டநோயால் மிகவும் வருந்துங்காலை, பரம தயாளுவாகிய பரமசிவம் அவ்வரசனுக்குக் கனவிற் றோன்றி "நமக்கோராலய மியற்றக்கடவை; அப்போது உன்னோய்உன்னின்று நீங்கும்" எனச்சொல்லியதாகவும், அவ்வரசன் அவ்வாணையைத் றலைமேற்கொண்டு அவ்வாறே வோர் சிவாலயம் நிருமிக்கக் குட்டநோய் ஆதவனைக்கண்ட பனிபோல் நீங்கிவிட்டதாகவுங் கூறுவர். அவ்வாலயத்திலிருக்கும் இலிங்கமும் அவரெதிர் நிற்கும் நந்திகேசுவரரும் யார் தான் பெரிதாய் வளருகிறோம், அதைப்பார்ப்போம் என்று ஒருவரோடொருவர் போட்டிபோட்டுக்கொண்டு வளர்ந்ததாகவும், அப்பொழுதோர் மகம்மதியன் அந்நந்தியின் காலிலும் முதுகிலும் ஆணியையறைந்ததாகவும் பிறகு அந்நந்தி வளராமல் அப்படியே நின்றுவிட்டதாகவும் சிலர் கூறுவர்.

இன்னும் வேறு சிலர், அந்நந்தி யிவ்வளவு பெரிதாக வளர்ந்ததிக் காரணத்தாலன்று என்றும், அந்நந்தி தானே வளர்ந்து வருவதைக் கண்டு அரசன் [illegible] கன்னைட்டுச் சிற்பிகளை வினவ, அவர்கள் அதன் காரணத்தை விளக்க முடியாமல் திகைப்ப, சின்னாட் கழித்து அயல்நாட்டிலிருந்து ஆங்கு வந்த ஓர் பால சிற்பி [illegible]னுள் ஒரு தேரையிருப்பதாகவும், கல்லினுட் டேரை யிருப்பின் வளரும் சுபாவம் கற்கட்குண்டென்றும் சொல்லி, சந்தனத்தை அரைத்து நந்தி முழுவதும் நன்றாய்ப்பூச, மற்றையபாகமெல்லாம் உலர்ந்து, அத்தேரை யிருக்கும் சிறிதுபாகத்தின்மேற் சந்தனம் உலராமலிருப்ப, அப்பக்கத்திற்றான் தேரை யிருக்கவேண்டுமென்று துணிந்து, தனது சிற்றுளியால் அப்பால சிற்பி நந்தியின் அப்பாகத்தைச் சிறிது தகர்ப்ப, ஒரு தேரையும் சிறிது நீரும் வெளிவந்ததாகவும் சொல்வர். நாம் இக்கதைகளைப் பூரணமாக நம்பினும் சரி; நம்பாவிட்டாலும் சரி. அந்நந்தி ஒரே ஒரு பெரிய கல்லில் வெகு நயமாய் வேலைசெய்யப்பட்டிருப்பது, பூர்வகாலத்திற் றென்னிந்தியாவிலிருந்த சிற்பிகளின் தொழில் வல்லமையை நன்குணர்த்துகின்றது.

பன்னிரு இரவு.

[8-வது பக்கத் தொடர்ச்சி.]

காதலினாலாய தாபம் பொங்கிக் கிளம்பியது. அதுமுதல் அந்த அம்மை தனது சபதத்தையும் கவுரவத்தையும் முழுதும் மறந்து ஏங்கிய மனத்தோடுழன்றனள். இந்தப் பெண்ணினது மனவுறுதியை யெவ்வாறு மெச்சுவோம்! சில நாட்களுக்கு முன்னந்தான் ஏழுவருடகாலம் தமயனிறந்ததற்காக துக்கங்கொண்டாடும் நிமித்தம் வெளித்தோன்றுவதில்லை யென்று தீர்மானித்து வெகு விமரிசையாயிட்ட சபதமெல்லாம் ஓர் அழகிய வாலிபனைக் கண்டவுடன் சூரியனைக்கண்ட பனிபோல் இருந்த விடந்தெரியாமல் பறந்து போயிற்றே! ஆனாலும் பெண்ணினந்தானே; பாவம்! அவளென்ன செய்வள்? மலர்கணையின் ஆற்றலை வெல்ல வல்ல வலி உலகிலுளதோ? இதுவரை அரசன் தன்னிடத்தில் கொண்ட காதல் மூலமாய்ப் படுவதாகச் சொலிய துயரிற் பதின்மடங்குதான் இப்பொழுது அநுபவிக்கலானாள். பித்துப் பிடித்தவளைப்போல் மற்றைய காரியமொன்றையும் கவனியாமல் அரசன் தன்னிடமனுப்பிய தூதனையே நினைத்துருகிய மனத்துடன் தனக்குரியபோகமெல்லாவற்றையும் வெறுத்து காமத்தீயால் சுட்டுண்டு வருந்துவாளானாள். ஆகையால் அவனை விட்டுப் பிரிய மனங்கொள்ளாது எவ்விதமாவது அவனை மீளவும் தன்னிடத்தில் வரவழைத்துக் கண்ணாரக்கண்டு களிப்படைந்து அவனுடன் சம்பாஷணை செய்து அவனது இன்னிசையான குரலோசையைக் கேட்டு தேகம் புளரித்து ஆனந்தத்துள் மூழ்க பேரவாக்கொண்டனள். ஆனால், [illegible]தை யெவ்வாறு இயற்றுவது? அரசனால் அனுப்பப்பட்டு தன்னிடம் வந்தபொழுது அவனுக்கு சரியாக செவிகொடாமல் தானே அவன் மனம் நோகும் வண்ணம் கடிந்துரைத் தனுப்பிவிட்டுப் பின் அவனைத்

தன்னில் புகச்செய்வது இயலுமோ? ஆயினும் தாம் கொண்ட கருத்தை
ஒரே வுறுதியாய் இடையூறுகளைக் களைந்து நிறைவேற்றுவதில் மிகுந்த
சாமர்த்தியங் கொண்டுள்ள பெண்ணினத்தா ளாகையால் இப்பொழுதும்
தன்னெண்ணம் பூர்த்தி யடையும் வண்ணம் வோருபாயம் கண்டாள்.
உடனே தனது வேலைக்காரனொருவனை யழைத்து அவனிடம் தானணிந்
திருந்த விலையுயர்ந்த மோதிரமொன்றைக் கொடுத்து "அரசனிங்கனுப்பிய
சேவகன் இப்பொழுது தான் வாயிற் கடந்து தெருவடைந்திருப்பான். நான்
ஏற்றுக்கொள்ளே னென்றுரைக்கும்பொழுதே நான் சொல்வதை மீறி வேந்
தனளித்த மோதிரத்தை இங்கிட்டுப் போயினான். இதைப்பெற்றுக்கொண்டு
விரைவிற் சென்று நான் அங்கீகரித்துக் கொள்ளேனென்று சொல்லி அவ
னிடங்கொடுத்து விட்டுவா" என்று கட்டளையிட்டனள். அவனும் வயோலா
வைக்கண்டு மோதிரத்தை அவனிடங் கொடுத்தான். தான் மோதிரமொன்
றும் ஒலீவியா வினிடங் கொடுக்கவில்லை யென்று நன்கறிந்தவளாகையால்
இந்தச் சேவகனது மொழிகள் மிகுந்த வியப்பை விளைத்தன. அபூர்வமான
புத்திகூர்மையையும், தேர்ந்த அறிவையும், நுட்பமான உணர்ச்சியையு
முடைத்திருந்ததால் வயோலா சடுதியில் ஒலீவியா வினது தந்திரத்தை
முற்றுமறிந்துகொண்டு சேவகனுக்கு முன்னிலையில் யெஜமானியின் உண்மை
யான மனநிலைமையைப் புகலாதொழியக் கருதி அந்தப் பெருமாட்டியின்
மானங்காக்கும் வண்ணம் ஒரு பொய் சொல்லத் துணிந்தாள்.

"அவள் என்னிடமிருந்து மனப்பூர்வமாய்ப் பெற்றுக்கொண்டனள்.
இனி நான் அதை ஏற்றுக்கொள்ளேன்".

"அடே, இதேதிது; பெருந்தொல்லை அதெல்லாம் எனக்குத்தெரியாது.
இங்குமங்கும் உங்களிருவர்க்கு மிடையி லலைவதுதான் என் வேலையோ?
எனக்கு அலுவல் தலைக்கு மேலுளது. வேண்டுமெனின் பெற்றுக்கொள்.
அன்றாகின் அதோ உன் கண் முன் எறிந்திட்டேன். அதிஷ்டமுள்ளவன்
எடுத்துக்கொள்ளட்டும்" என்று சொல்லி மோதிரத்தையும் சுழற்றி எறிந்து
விட்டுச் சென்றிட்டான். அவன் சென்ற பின்பு எறியப்பட்ட மோதிரத்
தைப்பொருக்கி யெடுத்துக் கலங்கிய மனத்தினளாய்ப் பின்வருமாறு தனக்
குத் தானே பேசிக்கொண்டாள்:—

"நான் அவளிடம் மோதிரமொன்றுங் கொடுக்கவேயில்லையே. அவள்
இவ்வாறு பாசாங்கு செய்வதெதற்காக? யான் அறியக்கூடவில்லையே. ஒருக்
கால் நானொன்று நம்பி என் மேல் மோகங்கொண்டனளோ? நான் அவ
ளுடன் பேசிக்கொண்டிருக்கையில் என்னை உற்று நோக்கினள். தன்னோ
டொருவன் பேசிக்கொண்டிருக்கிறானென்பதை முற்றும் மறந்தவள்போல
என்னை ஏறஇறங்கப் பார்த்தவண்ணமாய்ப் பத்துவார்த்தைக் கொருவார்
த்தை மறுமொழி புகன்றாள். ஐயோ! பாவம். என்னை ஸ்திரீ புருஷ நியாய
மாய் நேசிக்கின்றனளெனத் தோற்றுகின்றது. நான் திரும்பவும் அவள்
மனைக்குப் போகவேண்டுமென்ற எண்ணங்கொண்டு இந்த சூழ்ச்சி செய்
திருக்கின்றனளென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றது.
மாறுவேடம்பூணல் ஓர் பெரிய பாவகாரியமென்று இப்பொழுது நன்கு புல
ப்படுகின்றது. இதெவ்வாறு முடியுமென வூகிக்க யென்னாலியலவில்லை. அர

சனே அவளை நேசிக்கிறான்; நானே அவன்மேல் காதல்கொண்டிருக்கிறேன். அவளோ என் வேஷத்தைக் கண்டு மயங்கி என்னிட மன்பு கூர்ந்திருக்கிறாள். ஐயோ! ஒலீவியாவினது நிலைமை மிகவும் பரிதபிக்கத்தக்கது. என்னை யெண்ணி யேங்கும் ஏக்கமெல்லாம் பயனற்றன்றோ? என்ன செய்வதென் றெனக்குத் தெரியவில்லை. மதிமயங்கி சுழலிலாழ்ந்த படகுபோல் வருந்துகின்றேன். பக்தவத்ஸலா! உன் கையிலொப்பித்து விட்டேன்; இனி என்னாலாவதொன்றில்லை; இந்தக் குகையினின்று வழிகாட்டுவ துன்கடமை'.

இவ்வாறு புலப்பி விட்டு மனதைத்தேற்றிக்கொண்டு கடிந்து சென்று அரண்மனை யடைந்தாள். (இன்னும் வரும்.)

☞ என். கலியாணசுந்திரம்.

சரீர ஆரோக்கியம்.

"நோயற்றவாழ்வே வாழ்வு, குறையற்ற செல்வமே செல்வம்." செல்வத்துள் எல்லாம பெருஞ்செல்வம் சரீர ஆரோக்கியம். நாம் ஆரோக்கியமாயிருக்கும்பொழுது நமது சொந்தக் கருமத்தைச் செய்து கொள்ளவும், பிறருக்கு நன்மை செய்யவும் கூடும். அல்லாது வியாதிகளுக்கு இடங்கொடுத்து நமது சரீர சௌக்கியங் குன்றி க்ஷீணகதி யடைந்தபின் எவ்வாறு அக்கருமங்களை நடத்துவது? வியாதி கண்டு நமது தைரியங்குறைந்தால், பெற்றோர், உற்றோர், உறவினர், அயலார் அனைவர்களுக்கும் வருத்தத்தைக் கொடுப்பதோடு கூட பூமிக்கும் பாரமாவோம். ஆனதுபற்றி நாமெல்லோரும் தேக சுகத்தைப் போக்கிகொள்ளாமல் அத்தேக சுகத்திற்கு வேண்டிவகை அனைத்துஞ்செய்து காப்பாற்றிக்கொள்வது நமது கடைமையாம். நோய் யாவர்களுக்கும் நிர்நிமித்தமாக உற்பத்தியாகிறதென்றும், தெய்வத்தின் குற்றமென்றும் வீணில் சில பேர்கள் கடவுளினிடத்தில் குற்றத்தைச் சாற்றுகிறார்கள். அங்ஙனமல்ல, காரணமின்றி ஒருபொழுதும் வியாதி நமக்கு உண்டாவதில்லை. நமது அஜாக்கிரதையினாலேயே பல வியாதிகள் உண்டாகின்றன. எளிதில் ஜீரணிக்காத உணவுகளைச் சாப்பிடவோ, நன்றாய்க் கனியாதக் காய்களைத்தின்னவோ, சரீரம் அதிகம் பலவீனமா யிருக்கும்பொழுது ஆகாரம் உட்கொள்ளவோ கூடாது. மேலும் ஈரவஸ்திரங்களைக் கட்டிக்கொண்டு நம் ஸ்திரீகள் சில சமயங்களில் வீட்டுவேலைகளைச் செய்கின்றனர்; அவ்விதம் செய்வது உடலுக்குக் கெடுதலைச்செய்யும். சதுப்பு நிலத்தில் ஊறும் ஜலத்தில் ஸ்நானபானஞ் செய்தால் ஜுரம் உண்டாகும். ஆகாயத்திற் கிளம்பும் ஒரு வகை விஷத்தால் ஓர்வித ஜுரம் உற்பத்தியாகின்றன என்று வைத்தியர்கள் கூறுவது முண்டு. நிலம் குளிர மழைபெய்து, வெய்யிலில் ஈரம் உலரும்பொழுது மேற்கூறியுள்ள விஷக்காற்றுத் திரளாய் உண்டாவதால் அடிக்கடி ஜுரம் வருகிறதற்குக் காரணமாகிறது. அளவிற்கு அதிக, வெப்பம், குளிர்ச்சி யிவை தேகத்திற் படுவதும், தேகம் இளைத்து ஆயாசம் அதிக

முண்டாவதும் ஜுரம் வருகிறதற்கு ஏதுக்களாகும். இது போன்ற அநேக காரணங்கள் நோய் உண்டாவதற்கு இடையாயிருக்கிறது. தீரத்தெளியப் பார்ப்போமானால், யாதாயினும் ஒரு விதத்தில் அதிக்கிரமித்து நடந்ததினாலேயே வியாதி உண்டானதென்று நாம் நன்றாய் அறிந்துகொள்ளலாம். ஆனது பற்றி நாம் "வெள்ளம் வரும் முன்னமே, அணைகட்டிக்கொள்ளல் வேண்டும்' என்கிறதற் கிணங்க ஆவசியமான விஷயங்களைக் கவனிக்கவேண்டும். அதாவது, அதிகாலையில், துயில்விட்டு எழும் வழக்கம் நாம் ஒவ்வொருவரும் செய்துவர முயலவேண்டும்.

இவ் வழக்கத்தினால் உண்டாகும் நன்மைகள் அனந்தமென்று அறிந்தும், அநேகர் அதிக தூக்கத்தின் ஆசையினாலும், சோம்பலினாலும் பொழுது விடிந்து ஆதித்தியன் உயரக்கிளம்பியும் எழுந்திருக்க மனம் வராமல் தூங்குகிறார்கள். அவ்வழக்கம் தேகத்திற்குக் கெடுதலைச் செய்யக்கூடிய மூலகாரணமாகும். பொழுதுவிடிந்த பின் நித்திரைசெய்வது உடலுக்குக் கெடுதலைச் செய்வதோடு கூட, நமது வாழ்நாளில் முக்கியமாகிய காலைபபொழுதையெல்லாம் வீணாக்கி, அநேக காரியசித்திகளுக்கும் இடையூறாகிறது. இரவில் சரியான காலத்தில் நித்திரைசெய்து அதிகாலையில் எழுந்தால், சுறுசுறுப்பும், மனதிற்கு ஒருவித உற்சாகமும், புத்திக்குத் தெளிவும் உண்டாகும் பல விஷயங்களைக் குறித்து யோசிக்கவும், படிக்கவும், வேலைகள் செய்யவும், சங்கீதங்கள் அப்பியாசஞ் செய்துகொள்ளவும் காலைநேரமே ஏற்றமயமாயிருக்கிறது. இதற்கு திருஷ்டாந்தமாக, சிறுகுழந்தைகள் அதிகாலையில் எழுந்து சப்தஞ் செய்யவும், விளையாடவும், தாயின் முகத்தைப்பார்த்துச் சிரித்துக் கொண்டு மிருக்கிறது. உலகத்தில் முன்காலத்திலும், தற்காலத்திலும் கீர்த்தி பெற்ற சிறந்த கவிவாணர்கள், சிற்பிகள், சுத்தவீரர்கள், ராஜாக்கள், ராஜப் பிரதிநிதிகள், இவர்களுடைய சரித்திரங்களை வாசித்துப்பார்ப்போமானால் இவர்களெல்லாம் அதிகாலையில் எழுந்து தங்கள் காரியங்களை ஊக்கமாய்ப் பார்த்து வந்தவர்களாக ஊர்ஜ்ஜிதப்படுகிறது. அவர்கள் அங்ஙனமன்றி, காலையில் தூங்கும் வழக்கம் உடையவர்களாக இருந்தால், தாங்களடைந்த உன்னத பதவியை கண்டிருக்கமாட்டார்களென்பது நிச்சயம். நூலாசிரியரும், தத்துவ சாஸ்திரியும், சுத்தவீரரும், ராஜரீக காரியங்களில் மிகத்தேர்ச்சியடைந்தவரும், "மகான்" என்று பட்டப்பெயர் பெற்றவருமான ப்ரட்ரிக் (Fredrick the Great)என்னும் புருஷிய தேசத்து அரசர், காலத்தின் அருமையை அறிந்தவராதலால் தன்னிடத்திலிருந்த அதிகத் தூக்கத்தைக் கட்டோடு விட்டொழிக்கத் தீர்மானித்து, தான் அதிகாலையில் தப்பாமல் எழுந்திருக்குமாறு குளிர்ந்த ஜலத்தில் கைக்குட்டையை நனைத்து தூக்கம் தெளிவதற்காக தன் முகத்தில் போடும்படி உத்தரவு செய்திருந்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. நம்முன்னோர்கள் அதிகாலையில் எழுந்துகொள்ளும் வழக்கமுடையவர்களென்று தெரிந்திருந்தும், சில பேர்கள் படுக்கையை விட்டு எழ மனம் வராமலும், வேளையில் சாப்பிடாமலும்' சரீரப்பயிற்சியில்லாமலும், வியாதியை உண்டு பண்ணிக்கொள்ளுகிறார்கள். நம்முடைய சரீரத்திற்கு வேண்டிய, நித்திரை, ஸ்நானம், போஜன முதலானவைகளை நாம் காலத்தில் செய்துகொள்ளவேண்டும். இவ்விதம் காலாகாலத்தில் மேற்கூறியபடி செய்து வந்தால் நம்முடைய குறுகிய நாட்களை அபிவிர்த்தியாக்கிக் கொண்டதாகவே சொல்லலாம்; மேலும் நாம் உட்கொள்ளும், தண்ணீர், ஆகாயம்

யிவை இரண்டும் சுத்தமாயிருக்கவேண்டும். சுத்தமான நீர் சரீரத்திற்குக்
குணத்தைச் செய்யும். சில பேர்கள் வென்னீர் உட்கொள்ளுகிறார்கள். இது
ஜலத்தைச் சுத்தி செய்யவும் ஜீரணசக்தியைப் பலப்படுத்தவும் ஏற்றதே
யென்றாலும், அவ்விதம் உட்கொள்ளுவது, உடலுக்கு க்ஷீணத்தையே
உண்டு பண்ணும். சுத்த ஜலம் அவ்விதஞ் செய்யாமல், க்ஷீணத்தைப்போக்கி
ஆரோக்கியத்தைக் கொடுக்கும். திருஷ்டாந்தமாக, ஒருவன் மயக்கம் வந்து
விழுந்தால், சுத்த ஜலத்தில் கொஞ்சம் அவன் முகத்தில் தெளித்த மாத்திரத்
தில், மூர்ச்சை தெளிந்து எழுந்துவிடுவான். அதோடுகூட கொஞ்ச ஜலம்
சாப்பிடும்படி கொடுத்தால் அவனுடைய ஆயாசத்தையும் நொடிப்பொழுதில்
அது மாற்றிவிடும். தண்ணீரானது மேல்தோற்றத்திற்கு சுத்தமாகக் காணப்
பட்டாலும் அதெல்லாம் சுத்தமாகாது. சுத்தமான நீரைப் பானம்பண்ணி
னால் சரீரத்சிற்கு வியாதியில்லாமல் சுகமுண்டாகும். அசுத்தமான தண்ணீர்
பலகெட்ட நோய்களுக்குக் காரணமாகும். பெரிய பட்டணங்களில் நல்ல ஜல
மில்லாமல் அசுத்த ஜலத்தை உபயோகிப்பதினால், ஆனைக்கால், வாந்திபேதி,
குமட்டல், முதலான குரூரமான நோய்கள் உண்டாகிறது. அது நிற்க, நம்
ஸ்திரீகள் நாள்முழுவதும் வீட்டிற்குள்ளேயேயிருந்து எங்கும் அசையாம
லிருப்பவர்கள் வியாதியினாலும் அசௌக்கியத்தாலும் வருந்துகிறார்கள்.
ஐரோப்பிய ஸ்திரீகள் வெளிப்புறங்களில் மிகுதியாக நடந்து உலாவித் திரி
கிறது அதிக அசௌக்கியத்திற்கு இடையாகிறதில்லை. அதுபோலவே, நம்ம
ஸ்திரீகளும் சாயங்கால வேளைகளில் கொஞ்சதூரம் நடந்தால், பசியுண்டா
கும், நல்ல நித்திரையுஞ் செய்யலாம். பல செல்வ வந்தர் வீட்டுச்சீமான்க
ளும் சிறந்த தேகசவுக்கியம் இத்தன்மையானதென்று அறியார்கள். அதற்கு
காரணம் வேலைசெய்யாமல் சும்மா உட்கார்ந்திருப்பதும், வெளியில் செல்
லும்பொழுதெல்லாம் நடக்காமல் வண்டிகளில் செல்வதும்தான். ஆனது
பற்றி அவர்கள் உடம்பில் உதிரம் ஓடுகிற வேகம் குறைந்து மந்தப்படுகின்
றது. இரவெல்லாம் தூக்கம் நன்றாய் வருகிறதில்லை. அதனால் .அவர்களுக்
குப் பகலிலும்கூட சுறுசுறுப்பில்லாமல் சோர்வுற்றே யிருக்கும். எளிய
மனிதர்கள் புலங்களில், வேலை செய்தல், சாமான் கூடைகளைக் கடைத்தெரு
வுக்கு நெடுந்தூரம் நடந்து எடுத்துச்செல்லுதல் முதலானவைகளில் வருந்தி
உழைக்கின்றார்கள். அவர்கள் பசியில்லாமை, அஜீரணம், கைகால் பிடிப்பு
முதலிய நோய்களால் ஒருபோதும் வருந்துவதில்லை. இவர்களுக்கே நல்ல
தேகசௌக்கியம் பெறுவதற்கு ஏதுக்கள் அதிகமாயிருக்கின்றன. தனவான்
கள் வெளியே செல்லவேண்டிய அவசியமில்லை யாதலின் அவர்கள் அதிக
மாய் வெளியே நடந்துபோய் உடம்பை அலைக்கவேண்டியதில்லை யென்று
எண்ணுகிறார்கள். நமது சரீரம் அசைவுற்றால் இரத்த ஓட்டம் உடம்பு முழு
மையும் பரவத்தலைப்படுகின்றது. உதிரம் வேகமாய் ஓடினால் அதுபற்றி
மற்ற யந்திரங்களும் வேகமாய் அசையத்தலைப்படும். இருதயம் விரைவாய்
அடித்துக்கொள்ள ஆரம்பிக்கிறது. தன்னிடத்தில் உதிரம் வந்து சேரும்
பொழுதெல்லாம் அதைச்சுத்தி செய்யப்போதுமான காற்றை சுவாசாசயம்
ஏற்றுக்கொள்ளத் தொடங்குகிறது. சுத்தியான இரத்தமானது வேகமாய்த்
தேகமெங்கும் பரவிக்கெட்டுப்போயிருக்கும் தாதுக்களை சுத்தி செய்து தான்
செல்லுமிடமெங்கும் வேகமாய் ஊட்டங்கொடுத்துக்கொண்டே போகிறது.
இப்படி உதிரம் விரைவாய் ஓடுவதினால் உடம்பின் ஒவ்வொரு உறுப்பிற்கும்
உறுதியும், உற்சாகமும் உண்டாகின்றன. இதனாலே தான் வீட்டில் உட்கார்ந்

திருப்பவர்களைப் பார்க்கிலும் பகற்பொழுதெல்லாம் வெளியில் உழைப்பவர்களுக்குப் பசியும் தாகமும் அதிகமாய் உண்டாகின்றன. சரீரப்பயிற்சி வெளியிடங்களிற்செய்தால் இரத்தம் நன்றாய் ஓடிப்பரவும்; வீட்டிற்குள்ளே செய்தால் அவ்வளவு நன்றாய் இரத்தம் ஓடிப்பரவாது. வெளியே திரியும்பொழுது நிர்மலமான வெளிக்காற்றிலுள்ள பிராணாதார வாயு உதரத்தில் அதிகமாய் வந்து கலக்கும். அதினால் இரத்தத்திற்கு உயிர்ப்பிக்கிற சக்தி அதிகமாயுண்டாகி அது வெகு விரைவாய் வியாபிக்க ஆரம்பிக்கின்றது. தேகத்தில் எந்தப்பாகம் அசைந்து வேலை செய்கிறதோ அந்தப்பாகத்தில் உடனுக்குடனே புதிதாய் இரத்தம் ஓடுவதினால், வரவர அவ்விடம் புஷ்டியாகும். இதற்கு உதாரணமாகத் தொழிலாளர்களின் உருப்புகளைப் பாருங்கள்! கருமானுடைய கைகள் சம்மட்டி பிடித்தடிப்பதால் அவன்கைகள் எவ்வளவு புஷ்டியாயிருக்கிறது.

தையல்காரன் உட்கார்ந்துகொண்டே வேலை செய்வதால் அவன் கால்கள் எவ்வளவு மெலிவடைந்திருக்கிறது. ஆதலால் தேகத்திற்கு ஒவ்வொரு பாகமும் நன்றாய்ப் பிரயாசைப்படும்படி செய்யும் பயிற்சியே தேக ஆரோக்கியத்தைக் கொடுத்து, வியாதியைத் தடுக்கும். இன்னொரு விஷயம் நாம் முக்கியமாய் அறியவேண்டியது. அதாவது, மனக்கவலை வைத்துக்கொள்ளாதிருத்தல். நம் எல்லா பேர்களுக்கும் ஒவ்வொருவித கவலை யிருந்தபோதிலும், நாம் அவைகளைக் கூடிய வரையிலும் ஒழிக்க முயலவேண்டும், அதன்றியில் வீணில் மனதைச் சஞ்சலப்படுத்திக் கொள்வதில் தேகத்திற்குக் கெடுதலை விளைவித்து, உடல்மெலிந்து, மூளையிற் சூடேறி எப்பொழுதும் இரத்தம் கொதிப்பதற்கு இடமுண்டாவதால் மூளை நரம்புகளெல்லாம் பலவீனமடைந்து கொடிய நோய்களுக்கு இடமுண்டாகிறது. ஆனது பற்றி, அக்கவலை யென்னும் பெரும்நோயைத் தவிர்க்கவேண்டும். "அவன் அசையாமல் ஓர் அணுவும் அசையாது" என்று சாந்தமாயும், திருப்தியாயும், நமது வாழநாட்களை முற்றும் கழிக்கவேண்டும். அதினிமித்தம் கொடிய வியாதி கண்டு வருந்தும்பொழுது, தலைவிதியை நொந்து பித்தம் பிடித்தவர்கள்போல பிதற்றுவதில் யாதொரு பயனையுமடைவதில்லை. நாம் முன்னதாக ஜாக்கிறதையாகவே யிருக்கவேண்டும். பெற்றதாய் தன் பிள்ளைகளை நற்பழக்கம் பழக்கி நல்வழியில் நடத்தாமல் அஜாக்கிறதையாயிருந்து, குணங்கெட்ட சிறுவர், சிறுமியருடன் கூடி ஆடித்திரிய விடுவாள். அவ்விதம் செய்வதினால், அக்குழந்தைகள் நாளா விர்த்தியில் சீரழிந்து, சூதாடப்பயின்று, திருட்டுப் புரட்டுச் செய்து கேடுகெட்டவர்களாகிய பொழுது, அவர்கள் தாயார் தங் குழந்தைகளைப்பார்த்து விசனப்படுவதால் வரும் பயன் எதுவும் இல்லை. அதுபோல், நாமும் பலகாரணங்களால் தேகசுகத்தைக் கெடுத்துக்கொண்டால், பிறகு சரியாக்குவது மிகவும் கஷ்டமாகும். ஆதலால் நமக்குரிய கடமைகளைத் தீரச்செய்யவும், கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சிறந்த பொருள்களைத் தக்கபடி உபயோகிக்கவும், அநுபவிக்கவும், நாம் பிறருக்குச் சுமையாயிராமல் நம்மாலியன்றமட்டும் சௌக்கியமாய் வாழ்ந்திருக்கவும் முயலவேண்டும்.

ஓர் மாது.

ஜீவதத்துவ விளக்கம்.

முன்னுரை.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு."—திருக்குறள்.

தத்துவநூற் பயிற்சியே மாண்புடைத்தென் றெண்ணி அதனையே மிக வோதும் நம்மவருள், நம்மைச் சுற்றி நாம் தினந் தினங் கண்ணுறுந் தாவர ஜங்கமப் பொருள்களையும், அவற்றாலுண்டாம் பலாபலன்களையும் தெரிந்து கொள்வதற்குக் காதல் இன்னும் பிறந்ததில்லை. இப்போது மேற்றிசைக் கல்வி எங்கும் பரவ நம்மவருட் சிலர் அத்தகைய நூல்களைப் படிக்க ஆவல் கொண்டு கற்று வந்தாலும், அவர்களை மற்றவர்கள் கணித மோதுவதாயும், சரித்திரம் படிப்பதாயும் சொல்லி ஏக்கத்தோடு பார்த்து நிந்திப்பது மேலிட்டிருக்கின்றது. இந்த நிந்திப்பு அலைகடல் காணாத் தவளை தானிருந்த கிணற்றையே பெரிதென்னும் பேதைமையை யொக்கும்.

உயிர்நூல் எத்துணை பயனுடைத்தென்பதற்கு இரண்டொரு சான்றே ஈங்குக் காட்டுவோம். காப்பி, தேயிலை, கரும்பு, சோளம் முதலிய தாவரங்கள் சிற்சில சமயங்களில் ஓங்கி வளர்ந்து பலன் கொடாது குன்றிப்போகக் காண்கிறோம். இதற்குக் காரணம் சில பூச்சிகளேயாம். இவற்றை இன்னின்ன வென்று தெரிந்து, தாவரங்கள் நாசமடையாது இருக்கச் செய்பவர் உயிர்நூல் வல்லவரே. விஷச்சுரம் முதலிய வியாதிகள் உண்டாவதும் சில சிறிய ஜீவஜெந்துக்களாலேயாம். அவற்றையுங் கண்டு, அவை நஞ்சரீரத்துட் செல்லாது தடுத்து தேகத்தைப் பாதுகாக்கும் வழியைக் காட்டுபவரும் உயிர்நூல் வல்லவர்களே. இத்தகைய விஷயங்களைப் பற்றி இங்கு எழுத முயன்றதுவும் சில முக்கிய காரணங்களை உத்தேசித்தாம். அவை வருமாறு:—

முதலாவது, நமது மேல் அகஸ்மாத்தாய் உட்காருஞ் சிறு கொசுவினது சக்தியை யறியாது தத்துவம் ஓதுவார்க்கும், கணிதம் படிப்பார்க்கும், சரித்திரம் கற்பார்க்கும், எமது நூலும் அவர் நூலைப்போல் பயனுடைத்தென்று காட்டுவதற்கேயாம்.

இரண்டாவது, இவ்வித விஷயங்களில் நம்மவர்களுக்கு வெகு நாளாய்ப் பழக்கமில்லாததால் ஜீவஜெந்துக்களைக் குறித்துச் சில அசம்பாவிதக் கதைகளைப் புனைந்து வழங்கி வருகின்றார்கள். அவற்றுட் சிலவற்றை மட்டுமே ஈண்டெடுத்துக் காட்டுவாம். தேளானது முதுகில் மேவடித்துக் குஞ்சு பொறிப்பதென்பதும், பச்சைப்பாம்பு கண்ணைக் குத்துமென்பதும், அரணை நாவால் தீண்டின நிமிஷமே மரணம் என்பதும் உதாரணங்களாம்.

"குளவி வண்டினைத் தன்னினமாக்குமாபோல்"

என்று கல்வியிற் பெரிய கம்பரும் வழுவினாரன்றோ! இத்தகைய பொய்யை மெய்யென்று நம்பி மயங்குவோர்களுக்கு இந்நூலால் மயக்க மனைத்தும் ஒழியும் என்பது உறுதி.

———[]———

பெண் கல்வி.

பெண்பிள்ளைகள் ஆண்பிள்ளைகளைப்போலவே ஆத்மாவிலும், அறிவிலும், புத்தியிலும், ஒரே தன்மையரா யிருக்கின்றனர். அப்படி யிருக்கத் தக்கதாக அவர்களுக்குக் கல்வி கற்பிப்பதைப் பற்றிக் கவனியாதிருத்தல் தவறு. ஒரு தேசத்தை முன்னுக்குக் கொண்டுவரவும், அதை விருத்திசெய்யவும் வேண்டுமேயானால் ஒவ்வொருவரும், தங்கள் தங்கள் ஆண்பிள்ளைகளுக்குக் கல்வி யூட்டுவதுபோலவே பெண்பிள்ளைகளுக்குங் கல்வி யூட்டவேண்டும். உதாரணமாகக் கொஞ்சக் காலத்திற்கு முன் எவ்வளவோ கீழ் நிலைமையிலிருந்த யப்பான் தேசம் இப்போ உலகத்திலுள்ள பிரசித்திபெற்ற தேசங்களி லொன்றாய் வந்த காரணமென்னை? பெண்க ளெல்லோரும் கல்வியிற் தேர்ச்சி யடைந்தவர்களாய் வந்ததனாற்றான். உலகத்திற் கீர்த்திபெற்றவர்களும், தேசத்துக்கு நன்மை செய்து வந்தவர்களுமாகிய பெரும் பெரும் பிரபுக்களின் தாய்மார்கள் எல்லோரும் ஏறக்குறையக் கல்வியிலேயே நிறைந்தவர்களா யிருந்திருக்கின்றனர். கல்வி உத்தியோகத்திற்கும், உழைப்புக்கும் மாத்திரந் தேவையல்ல. ஒரு பயிரை வளரச் செய்வதற்குத் தண்ணீர் எவ்வளவு அவசியமோ, அதுபோல அறிவை வளர்த்தற்குக் கல்வியே முக்கியமானது. பெண் கல்வியினால் இருக்கும் நன்மைக ளநேகம்.

பெண்கள் கல்வி கற்றிருந்தால் தங்களுடைய வீட்டு வரவு செலவு கணக்குகளைத் தாங்களே பார்க்கவும், தங்களுடைய ஓய்வு நேரங்களை வீண் கதைகளிலேயுஞ் சண்டை சச்சரவிலேயுஞ் செலவழியாமல், பத்திரிகைகளையும், புதினங்களையும், புராணம் இதிகாசம் முதலிய நூல்களையும் வாசிக்கவுங்கூடும். பெண்க ளெல்லோரும் உயர்தரப் பரீக்ஷையிற் தேறவேண்டுமென்று ஓர் நிபந்தனையில்லை.

> "கற்க கசடறக் கற்பவை
> கற்றபி னிற்கவ தற்குத்தக"

என்னுந் திருவள்ளுவர் வாக்கியத்திற் கிணங்க நன்றாய் வாசித்தவர்கள் அதன் வழியே நின்றொழுகுவார்கள். பெண்கள் படித்தால் அவர்களகங்கார மடைந்து தங்களுடைய வீட்டுக் காரியங்களைக் கொஞ்சமேனுங் கவனியாமல் விட்டு விட்டு, வீட்டிலே யிருக்கிறவர்களுடனும், இன்னும் வருகிற போகிறவர்களுடனும் இங்கிலீஷ் பேசிக்கொண்டும், மற்றவர்கள் பேசுஞ் சொற்களிலிருக்கு மிலக்கணப் பிழைகளைச் சொல்லிக்கொண்டும் தங்களுடைய கல்வியையே மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துவதில் நேரங்க ளெல்லாவற்றையும் செலவழிப்பார்க ளென்றும் சிலர் சொல்வது முண்டு. "குறைகுடம் தளம்புவதே யொழிய தண்ணீரினால் நிரப்பப்பட்ட குடம் தளம்பாத வாறுபோல்" கொஞ்சம் வாசித்து விட்டுத் தாங்கள் வாசித்த நூல்களை விடவேறில்லை யென்று நினைப்போர்கள்தான் அப்படிப்பட்டவர்கள். அப்படித்தான் சிலர் கல்வியினால் நன்மை யடையாவிட்டாலும் எல்லாருக்குங் கல்வி தகாதென்று சொல்லுவது தவறு. நன்றாய் வாசித்த பெண்பிள்ளைக்குத் தன்னுடைய வீடுவாசலை எப்படிச் சுத்தமாய் வைத்திருக்க வேண்டு மென்பதைப் பற்றியும், குழந்தைகளை வளர்க்கும் வகையும், அவர்

களுக்கு வருத்தம் வராமற் காப்பாற்றும் வகையும், இன்னுங் குழந்தைகளுக்குந் தங்களுக்கும் வேண்டிய உடுப்புகளைத் தயாராக்கும் விதமும், பர்த்தாவுக்குச்செய்யவேண்டிய உபசரணையும், அத்துடன் அவர்கள்சிறுவர்களாயிருக்கும்பொழுது அவர்களுக்குப் பாடங்களை சொல்லிக்கொடுக்கவுங் கூடியவளாயிருப்பாள். அவர்கள் சிறுவர்களா யிருக்கும்பொழுது தாய்மார்கள் படிப்பித்தால் அவர்களுக்கு அது ஓர் வேலையாயிராமல், சந்தோஷத்துடனும், பொழுது போக்காகவும் படிப்பார்கள். அவள் வரவுக்குத்தக்க செலவு செய்வதே யொழிய மட்டுக்கு மிஞ்சி வீண்செலவு செய்து நட்டத்தை வருவிக்க மாட்டாள். ஔவையார், சீதை, தமயந்தி, நாளாயினி, சாவித்திரி, முதலிய பெண்மணிக ளெல்லோரும் கற்புக்கரசிகளாய் வந்தது யாதுகாரணம்பற்றி? கல்வியினாலன்றோ? எங்களுடைய முன்னோர்க ளெல்லோரும் கல்வியை எவ்வளவோ கவனமாகக் கற்றுவந்திருக்கத் தக்கதாக நாங்களதைக் கவனியாது விடுதலெவ்வளவு தவறு. இதனாற் பெண்களெல்லோரும் தங்களுடைய வீட்டுக்காரியங்க ளொன்றையும் பாராமல் கல்வியைமாத்திரம் கற்கவேண்டு மென்பதல்ல. "கற்றது கைம்மண்ணளவு கல்லாத துலகளவென்னும்" வாக்கியத்திற்கிணங்க நாங்க ளெங்களுடைய சீவியகாலம் முழுமையும் தான் கற்றாலும் கல்வியென்னும் சமுத்திரத்தின் ஆழத்தைக்காணமுடியாது. இப்போ சென்னை, பம்பாய், மைசூர் முதலிய எத்தனையோ பட்டணங்களிலும், தேசங்களிலும், எத்தனையோ பெண்களும், பிரபுக்களும், தங்களுடைய சொந்தப்பொருள் கொண்டும், இன்னும் மற்று முள்ளவர்களினுடைய உதவியோடும் பெண்கல்விக்காக உழைத்து வருகின்றனர். பெண்கல்வி நாளுக்குநாள் ஓங்கி வளர ஈசன் அருள் புரிவாராக.

☞ எஸ். ராசம்மாள்.

சாஸ்திரப் பாடம்.

முன் ஒரு பாடத்தில் பூமியின் ஆகர்ஷண சக்தியைப் பற்றிப் பேசினோமல்லவா? இச்சக்தியைப் பற்றி இன்னும் சற்று இப்பாடத்தில் விசாரிப்போம்:—

ஒரு சிறு கல்லை நழுவவிட்டால் அதுநேரே பூமியில் விழுகின்றதென்பதும், அப்படி விழுவதற்குக் காரணம் இன்னதென்பதும் உங்களுக்குத் தெரியுமே. கல்லை கீழே நழுவ விடுவதற்குப் பதிலாய், அதை ஒரு நூலில் கட்டித் தொங்கவிட்டால் நூல் நீளுகின்றது. நூல் கொஞ்சமாவது சுருங்கியிருக்கின்றதா? நேராய் பூமியை நோக்கி நீண்டிருக்கின்றது பாருங்கள். ஏன் நூல் நீண்டிருக்கின்றது? பூமி கல்லைத் தன்பால் இழுக்கும்போது கல் நூலை நீட்டுகின்றது என்று சொல்வீர்கள். அது சரியே. நூல் நீண்டிருக்கும் முகமாய்த்தான் பூமி கல்லை இழுக்கின்றது. பூமியின் ஆகர்ஷண சக்தி எந்தத் திசையில் கல்லை இழுக்கின்றது என்பதை நூல் காட்டுகின்றது.

ஒரு மெல்லிய நூலில் ஒரு சிறு கல்லைத் தாராளமாய்க் கட்டித் தொங்கவிடலாம். அதேமாதிரி சிறியவையாயுள்ள பல கற்களை அதே சிறு நூலில்

நான் கட்டித் தொங்கவிட்டால் நூல் அறுந்து போய் விடும். ஒரு கல்லைக் கட்டித் தொங்க விட்டபோது அறுந்து போகாத நூல் பல கற்களைக் கட்டித் தொங்கவிட்டபோது அறுந்து போவானேன்? அதற்குக் காரணத்தை ஆராய்வோம் பரீக்ஷையைச் சரிவரச் செய்வதற்கு பஞ்சினால் செய்த நூலைவிட இரப்பர் நூல் ஒன்று கிடைத்தால் மிகவும் நல்லது. குடையைச் சுற்றிக் கட்டும் இரப்பர் நூல் இருந்தாலும் போதுமானது. இப்பொழுது கல்லை இரப்பர் கயிற்றில் கட்டித் தொங்கவிட்டுப் பாருங்கள். இரப்பர் முன்னிலும் நீளமாகின்றது. எவ்வளவு தூரம் இரப்பர் நீண்டிருக்கிறதென்பதை விரலினாலாவது, அல்லது உம்முடைய பென்சிலைக் கொண்டாவது, அல்லது அங்குலங்கள் போட்டுள்ள ஒரு கோலைக் கொண்டாவது அளந்து பாருங்கள். அளந்தபின் அதுவே போன்ற மற்றொருகல்லையும் அதே இரப்பர் கயிற்றில் தொங்கவிடுங்கள். இப்பொழுது இரப்பர் எவ்வளவு நீண்டிருக்கின்றது? முன்னிலும் அதிகமாய் நீண்டிருக்கின்றதென்பீர்கள். ஆம். அப்படியேதான இரப்பர் கயிற்றை நீளமாக்க வேண்டுமானால் நீங்கள் என்ன செய்யவேண்டும்? இழுத்தாலல்லவா நீளமாகும். இப்பொழுது யார் இரப்பரை இழுக்கிறார்கள்? கல்லல்லவோ இழுக்கின்றது. ஒரு கல் எவ்வளவு தூரம் இரப்பரை இழுக்குமோ அதை விட அதிகமாய் இரண்டு கற்கள் இரப்பரை இழுக்கின்றன. அதினும் அதிகமாய் மூன்று கற்கள் இழுக்கின்றன. அப்படியே கல் அதிகமாக இழுக்கும் பலமும் அதிக மாகின்றது. கல் இரப்பரை இழுப்பதற்குக் காரணம் உங்களுக்கு முன்னமேயே தெரியும்.

பூமி கற்களைத் தன்பால் இழுக்கின்றது. இழுக்குங் காலத்து கற்கள் பூமியின்பால் போகப்பிரயத்தனம்செய்வதால் இரப்பரை இழுக்கின்றன. ஆகவே ஒரு கல்லை பூமி எவ்வளவு பலத்துடன் இழுக்கின்றதோ அதைவிட அதிக பலத்துடன் இரண்டு கற்களை அதிக பலத்துடன் பூமிதான் இழுக்கின்றது. ஆகையால் அநேக கற்களை நூலில் கட்டித் தொங்க விட்டபோது நூல் அற்றுப் போனதற்குக் காரணம் இப்பொழுது தெளிவாய் விளங்குகின்றது அல்லவா? அநேகம் கற்களை பூமி அதிக பலத்துடன் இழுப்பதால் அவற்றைத் தாங்க நூலால் கூடுகிறதில்லை. ஆகையால் நூல் அறுந்து போகின்றது. கற்களை எடுத்துவிட்டு ஒரு அரைரூபாயை அந்த இரப்பர் கயிற்றில் கட்டி எவ்வளவு தூரம் இரப்பர் நீளுகின்றதென்று பாருங்கள். பிறகு அரைரூபாயை எடுத்து விட்டு ஒரு ரூபாயை அந்த இரப்பரில் தொங்கவிட்டுப் பாருங்கள். இப்பொழுது இரப்பர் முன்னிலும் இரண்டு மடங்கு (கிட்டதட்ட) நீளமாகின்றது. ஆகையால் அரை ரூபாயை எவ்வளவு பலத்துடன் பூமி இழுக்கின்றதோ அதைவிட இரண்டுபங்கு பலத்துடன் பூமி ஒரு ரூபாயை இழுக்கின்றது. இதுவே மாதிரி மூன்று (3) பைசாவை இழுக்கும் சக்தியைவிட ஆறு (6) பைசாவை இழுக்கும் பலம் இரண்டு பங்கு அதிகமாயிருக்கும். அரை ரூபாயில் எவ்வளவு வெள்ளி யிருக்கிறதோ அதைவிட இரண்டு பங்கு வெள்ளி ஒரு ரூபாயில் இருக்கிறதென்பதை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டுவதில்லையே? அதேமாதிரி மூன்று பைசாவில் இருப்பதைவிட, ஆறு பைசாவில் இரண்டு பங்கு தாம்பிரம் உளது.

ஆகவே ஒவ்வொரு வஸ்துவிலும் அடங்கி யிருக்கும் பொருளின் அளவுக்குத் தக்கபடி பூமியின் ஆகர்ஷண சக்தியும் வேறு படும். ஒருவஸ்துவில் உள்ள பொருளை விட மற்றொரு வஸ்துவில் உள்ள பொருள் 100 பங்கு அதிகமானால், அதிக பொருளையுடைய வஸ்துவை 100 பங்கு பலத்துடன்

பூமிதன்பால் இழுக்கும். அதிகபலத்துடன் பூமி இழுக்கின்றதென்பதை, இரப்பர் போன்றது இழுத்தால் நீளக் கூடிய பொருளகள் நமக்கு நன்றாய்க் காட்டும். ரூபாயில் வெள்ளி இருப்பது போலவும், பைசாவில் தாமிரம் இருப்பது போலவும், ஒவ்வொரு வஸ்துவிலும் உள்ள பொருள்களுக்கும் ஆங்கிலேயர் “mass” என்று பெயர் சொல்லுவார்கள். (‘மாஸ்’ என்பதறகுத தக்க தமிழ்மொழி நமக்குக் கிடைக்காததினாலும் சம்ஸ்கிருத வார்த்தை உபயோகிக்கத் திறமை யற்றவர்களாயு மிருப்பதினாலும் பின்வரும் பாடங்களில் (mass) மாஸ் என்னும் இங்கிலீஷ் வார்த்தையைக் கொண்டே ஒவ்வொரு வஸ்துவிலும் அடங்கியுள்ள பொரு ளினியற்கையைக் குறிப்போம். ஆகவே ஒவ்வொரு வஸ்துவிலும் உள்ள பொருளை அதன் மாஸ் என்போம். இரண்டு வஸ்துக்களை பூமி ஒரே அளவு பலத்துடன் தன் பால் இழுக்கும் பக்ஷத்தில் ஒன்றின்கண் உள்ளமாஸ் மற்றொன்றிலுள்ள மாஸுக்குச் சரியே அல்லவா? ஒருவஸ்துவில் உள்ள பொருள் தொகை மற்றொன்றில் இருப்பதைக்காட்டிலும் அதிகமாயிருந்தால் அதிகமாயுள்ள வஸ்துவை பூமி அதிக பலத்துடன் இழுக்கும். ஒருவஸ்துவை பூமி எவ்வளவு பலத்துடன் இழுக்கின்றதோ அதைத்தான் அந்த வஸ்துவின் “கனம்”, ‘பாரம்’ அல்லது “எடை” (weight) என்கிறோம். ஆகையால் ஒவ்வொரு வஸ்துவிலும் உள்ள பொருள் தொகை (mass) வேறு, அப்பொருளைத் தன்பால் இழுக்கும் ஆகர்ஷண சகதியின் காரியம் வேறு என்பதை நீங்கள் தெளிவாய் அறிதல் வேண்டும்.

☞ ஆர். கே. சுவாமி, பி-ஏ. எல்-டி.

சதாரம்.

அங்கம் உ. களம் ௫.

இடம்:—சத்திய புரியைச் சார்ந்த ஓர் வனம்.

காலம்:—மத்தியானம்.

புஷ்பாங்கதன்:—தெய்வமே சில தினங்களுக்கு முன் நடந்த சமாசாரமெல்லாம் என் ஞாபகத்திற்கு வருகிறதே. என்கதி இவ்விதமாய்விட்டதே. ஒரு மாதத்திற்கு முன் யாதொரு விசாரமன்னியில் வெகு சந்தோஷமாக என் காலத்தைக் கழித்துக்கொண்டு வந்தேன். அப்பொழுது, விவாகத்தைப்பற்றி யான் அதிகமாய்ப் படித்திருந்ததினால் விவாகஞ்செய்துகொள்ள வேணுமென்ற எண்ணம் எனக்கு இல்லாமலே போய்விட்டது. ஆனால் இந்த ஒரு மாதத்திற்கு முன் என்னுடைய பிதாவும் மந்திரியும் என்னை யழைத்து விவாகஞ் செய்துகொள்ளவேணுமென்று பலமுறையும் கட்டாயப்படுத்தினர்கள். யானோ விவாகத்தால் வரக்கூடிய கெடுதல்களைக் கேட்டும் புஸ்தகங்கள் மூலமாய் அறிந்துமிருப்பதால், அவற்றை அவர்களுக்குப் பிரத்தியக்ஷமாக எடுத்துக்காட்டி விவாகமே எனக்கு வேண்டாமென்று ஒரே முரண்டாய் நின்றேன். ஆனால் அவர்கள் விவாகஞ்செய்து கொள்ளத்தான் வேணுமென்று சில நியாயங்களை யெடுத்துரைக்க, யான் அவர்களு

டைய அபிப்பிராயத்திற்கு ஒருவாறு இணங்கினேன். எனக்குத் தகுந்த பெண் கிடையாததால் வந்தவர்களை யெல்லாம் இகழ்ந்துபேசி, ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒவ்வொரு குற்றமிருக்கிறதாக எடுத்துக்காட்டி, விவாகமென்ற விஷயத்தை நிந்தித்துப்பேசி, அதனால் என் பிதாவுக்குக் கோபத்தையுண்டாக்கி ஒருமாதகாலமாக, காராக்கிரகத்திலும் அடைபட்டு என் காலத்தைக் கழித்துக் கொண்டுவந்தேன். அவ்விதமிருக்கிறபொழுது, என் ஸ்திதியைக்குறித்து ஒருவாறு மனதில் சஞ்சலப்பட்டாலும், விவாகத்தைப்பற்றி நினைக்கும்போதெல்லாம் நான் அடையப்பட்டிருக்கிற சிறைச்சாலையை தெய்வலோகத்துக்குச் சமமாக நினைத்து எனது காலத்தைச் சந்தோஷமாகக் கழித்துக் கொண்டுவந்தேன். அந்தச் சமயத்தில் எனது மந்திரியார், கூடக்கூட அவ்விடம் வந்து எனக்கு அநேகவிதமான புத்திகளைக் கூறி, என்னை விவாகஞ்செய்துகொள்ளும்படி கட்டாயப்படுத்தினர். ஆனால் அவற்றையெல்லாம் மனதில் வைத்துக்கொள்ளாமல் யான் ஆனந்தமாயிருந்தேன். எவ்விதம் ஆனந்தமாயிருந்தால்தானென்ன? ஒரு அரசனுக்குப் பிறந்துவிட்டு எவ்வளவு காலம் காரணமின்றி சிறைச்சாலையில் அடைபட்டிருக்கிறது. இதை நினைக்கும்போதெல்லாம் கண்ணீர் ஆறாய்ப்பெருகிக்கொண்டும், விவாகத்தைப்பற்றி நினைக்கும்போதெல்லாம் ஒருவாறு தேறுதல் அடைந்துகொண்டும் என் காலத்தைக் கழித்து வந்தேன். அப்படியிருக்க, ஒருநாள் இரவில் கனவுகண்டு அதின் மூலமாக, செட்டியாரின் மகளாகிய சதாரத்தை விவாகஞ்செய்துகொண்டு இவ்விராச்சியத்தை யிழந்து, பிதாவையும் கானகத்திற்கு அனுப்பிவிட்டு, மந்திரியையும் துறந்து, யானும் அவமானப்பட்டு, தங்கியிருக்க இடமில்லாமல் இக்கானகம் வந்து சேர்ந்தேன். பட்டத்துக்கு வரக்கூடிய இராஜகுமாரனாகிய யான் க்ஷணநேரத்தில் இக்கதியை யடைந்தேன். இதை நினைக்கிறபொழுது என் மனம் பரிதவிக்கிறது. ஆ, தெய்வமே இந்தப்பெண்ணைத் தொட்டு மாலையிட்ட க்ஷணமே இக்கதியை யடைந்தால், ஸ்திரீகளை விவாகஞ்செய்துகொண்டு சதாகாலமும் அவர்களுடன் வாசஞ்செய்கிறவர்கள் எவ்வளவு துன்பத்தை யடையமாட்டார்கள். இவளைப்பற்றி நிந்தித்துப் பேசுவதில் பிரயோசனமென்ன இருக்கிறது. அவர் அவர் முன் செய்த பூஜாபலத்தையல்லவோ இந்த ஜென்மத்தில் அடைகின்றனர். அதே மாதிரியாக, யான் முன் ஜென்மத்தில் என்ன பாவம் செய்தேனோ, அதின் பலனை யிப்பொழுது அனுபவிக்கிறேன். இதற்காக யாரைப்பற்றிக் குற்றஞ் சொல்லுகிறது. நான் இந்த ஜென்மத்தில் அனுபவிக்கவேணுமென்று என் தலையில் பிரம்மா எழுதினவையெல்லாம் நடந்தல்லவோ தீரும். விவாகஞ் செய்ததின் பலனை யுடனே யடைந்துவிட்டேன். அந்தத்துரோகி இராஜ்ஜியந்தந்தால் தான் விவாகத்திற் குடன்படுவே னென்றுரைத்தவுடன், பிதா என் அபிப்பிராயத்தைக் கேட்டனர். அப்பொழுதாவது விவாகம் வேண்டாமென்றுரைத்திருந்தால் இக்கதியை யடைய நேரிட்டிருக்காது. என்ன புலம்புகிறேன். இதெல்லாம் தெய்வச்செயல். தெய்வமே. உமக்குக் கொஞ்சமாகிலும் என்பேரில் கிருபையில்லாமற் போய்விட்டதே. என் பிதாவை யெப்பொழுது காணப்போகிறேன், எவ்விடத்தில் தவித்துக்கொண்டிருக்கின்றனரோ அறியேன். அம்மகானுக்குப் புத்திரனாக ஏன் யான்ஜனித்தேன். அதினிமித்தமல்லவோ அவர் இக்கதியை யடைய நேரிட்டது. பிதா, தாங்கள் எங்கு சென்றீரோ, எங்குபரிதவிக்கின்றீரோ; சிறிதுநேரம் அந்த அரண்மனையில் தாமதித்திருந்தால் நாமிருவரும் ஒன்று சேர்ந்து இவ்விடம் வந்து சுகத்தையோ அல்லது துக்கத்தையோ அனுபவித்துக்கொண்டிருக்கலாமே. பிதா, என்னிமித்தமல்

லவோ தாங்கள் இக்கதியை யடைந்தீர். அதற்காக என்னை க்ஷமித்துக்கொள்
ளவேணும். அசரீரி வாக்காலும் யான் பூராவும் ஏமாந்துபோனேனே. இவளை
மணந்து சுகமாக நீடூழிகாலும் வாழ்ந்திருப்பாய் என்று அசரீரி சொன்ன
வாக்கின் பலனை யான் இப்பொழுது அனுபவிக்கிறது. அவ்வாக்கின்படி இது
தான் சுகமென்று நினைக்கவேண்டுமானால், எனக்குக் கெடுதலாய் ஏற்பட்டி
ருப்பது எவ்விதமிருக்குமோ அறியேன். என்னிமித்தமாக நமது மந்திரியும்
மிக்க அவமானத்தை யடைந்தனர். அம்மகாபாவி, எனக்கு அரைப்படி அரி
சியல்லவோ தருவேனென்றுரைத்தான். என்ன அநியாயம்! அவனுடைய
மாதா பிதாக்கள் கூட ஏன் இவ்விதம் செய்தாய் யென்று கேட்கவில்லையே.
இனி இதைப்பற்றிப் பிரஸ்தாபிப்பதிற் பிரயோஜனமில்லை. தெய்வமே,
வெயில் உக்கிரகமாயிருக்கின்றதே. காடோ, புலி, சிம்மங்கள் முதலிய துஷ்ட
மிருகங்களால் நிறைந்திருக்கப்பட்டிருக்கிறது. போய்த் தங்குகிறதற்குக்
கூட அருகில் ஒரு ஊரையும் காணேன். கால்களும் கைகளும் மிகவும் தளர்
ந்துபோயின. இனி யென்ன செய்வேன்? எவ்விடம் போவேன்? எவ்விதம்
காலங்கழிப்பேன்? தெய்வமே! நீர்தான் எனக்கு நல்ல வழியைக் காட்டித்
தரவேணும். ஆனாலும், இவைகளை யெல்லாம் நினைக்கிறபோது பெரிதாகத்
தோன்றவில்லை. என் பிரிய சகி, என் பிராண நாயகி, அந்த சதாரத்தை
நினைக்கிறபொழுது என் மனம் வருந்துகின்றது, மெய் துடிக்கின்றது, கண்
ணீர் ஆறாகப் பெருகுகின்றது. ஐயோ! அவள் ஒன்று மறியாதவள். நான்
புஷ்பச்செண்டை அவள்பேரில் எறிந்தவுடன், பெண்களுக்குரிய அச்சம்,
மடம், நாணம், பயிர்ப்பு இவைகளுக்குப் பங்கம் வராமல் தன் எண்ணத்தை
புன் சிரிப்பால் எனக்குத் தெரிவித்ததை நினைக்கிறபோது என்னவென்று
சொல்வேன். எனக்குத் தகுந்த பெண்ணே கிடைப்ப தரிதென்றல்லவோ
நினைத்துக்கொண்டிருந்தேன். யான்நினைத்ததைவிட பதின்மடங்கு நற்குணங்
களை யுடைத்தாயிருக்கின்றனள். அவளது சம்மதம் கேட்டவுடன், என்னை
விவாகஞ்செய்துகொண்டால், பட்ட ஸ்திரீ யென்ற பெயரையடைந்து யாவ
ரும் கொண்டாடும்படி சுகமாயிருக்கலாமென்றல்லவோ நினைத்து, உடன் சம்
மதித்தாள். தெய்வமே! அவளது எண்ணமெல்லாம் பாழாய்ப் போய்விட்
டதே. ஐயோ! அவளது மனம் வெயிலிற்பட்ட புழுப்போல எவ்விதம்
வாடித்துடிக்குமோ அறியேன். ஏ சதாரம், என் கண்மணி, நீ என்னுடன்
வருகிறேனென்றுரைத்தபொழுது, நீ ஒரு ஸ்திரீ, காட்டில் வரக்கூடாது.
அநேக ஊர்களுக்குச் சென்று நாம் பிழைக்கும் வழியைத் தேடி, அதிக சீக்
கிரத்தில் திரும்பி வந்து, உன்னையும் அழைத்துக்கொண்டுபோகிறேன், அது
வரையில் உன் பெற்றோர்கள் கூட சௌக்கியமா யிருவென்றுரைத்தவுடன்
அவள் கடுஞ்சினங்கொண்டு என்னைப் பார்த்து, என் பிராணநாதா, என்ன
சொல்லுகிறீர்கள்; தங்களுக்குப் பதிவிரதாதருமம் என்னவென்று நன்றாய்த்
தெரிந்திருந்தும், தாங்கள் இவ்விதம் என்னிடத்திலுரைப்பது உசிதமல்ல.
ஸ்திரீகள் தங்கள் நாயகன்மார்களைத் தெய்வமாக வல்லவோ கொண்டாட
வேணுமென்று சொல்லியிருக்கின்றன; அவர்கள் துக்கத்தையோ, சுகத்தை
யோ, எதையாவது அனுபவித்தாலும், அதைத் தாங்களும் அனுபவித்துக்
கொண்டு அவர்களுடைய நிழலைப்போல அவர்களை விட்டுப்பிரியாமல் சதா
காலமும் அவர்களுட னிருக்கவேணுமென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்
றன; உலகத்தி லிருக்கப்பட்டவர்களும் அவ்விதமே நடக்கின்றனர்; தவிர,
ஸ்திரீகள் காட்டுவழியாகப் போகக்கூடாதென்று சொல்வதும் தப்பு; ஏனெ
னின், சீதாதேவி 14-வருஷமும், துரௌபதி 13-வருஷமும் கானகத்தில்

தங்கள் பர்த்தாக்கள் கூட தங்களது காலத்தைக் கழிக்க வில்லையோ! அதே மாதிரியாக, அவளையும் என்னுடன் அழைத்துக்கொண்டு போகவேணுமென்றுரைத்ததுந்தவிர, காடுகளில் நான் சில சமயங்களில் வருந்துங் காலத்தில், அவள் என்னருகில் நின்று பிரிய வசனங்கள் சொல்லி எனது துக்கத்தையும் வருத்தத்தையும் ஆறுதல் செய்யலாமல்லவோ வென்றும் உரைத்தனள். அவள் உரைத்தது வாஸ்தவமாய்த் தோன்றுகிறது. ஏனெனின், இந்தச்சமயத்தில் அவள் இங்கிருந்தால், என் சிரமத்திற்கும், நான் படுகிற வருத்தங்களுக்கும் ஒருவித ஆறுதல் சொல்வாளே. அவள் என்னுடன் கானகம் வரத் தகுந்தவளல்லவென்று நான் அவளிடத்தில் பலமுறையும் சொல்லியும் கேளாததினால், யான் அந்த ஊர்க்கோட்டை வாசலுக்கு வெளியில் நிற்பேனென்றும், அவளுடைய பெற்றோர்களிடத்தில் க்ஷணம் விடைபெற்றுக் கொண்டு அந்த இடத்திற்கு வரவேணுமென்றும் சொல்லிவிட்டு, எனது வாக்கின்படி அவ்விடத்தில் நிற்காமல் ஓடிவந்துவிட்டேன். அதின் உத்தேசம் என்னவென்றால், அவள் குறிப்பிட்ட இடத்தில் வந்து என்னைத்தேடிப் பார்த்து, என்னைக்காணமல், திரும்பப்பெற்றோரிடத்திற்குச் சென்று அவளாவது சௌக்கியமா யிருக்கலாமென்று அவ்விதம் செய்தேன். ஐயோ! அவள் என்னைக் குறிப்பிட்ட இடத்தில் காணாது, தேடிக்கொண்டு தான் கானகம் வருகின்றனளோ, அல்லது யான் உத்தேசித்த பிரகாரம் தன் பெற்றோரிடத்தில் தான் சென்றனளோ, அல்லது தன்னை, பர்த்தாவும் ஏமாற்றி விட்டு எவ்விடமோ சென்றனர், இனி பிராணனை வைத்துக்கொண்டிருப்பதில் பிரயோஜன மில்லையென்று நினைத்துத் தன்னுயிரைத் துறந்தனளோ, யாதென்று அறியேன். தெய்வமே, என்னை இவ்விதமா பரீக்ஷை செய்ய வேணும். ஐயோ! என் கால் சுடுகிறதே, நிற்க நிழலில்லையே, யான் எவ்விடம் செல்வேன்; இனி கொஞ்சந் தூரம் போய்ப் பார்ப்போம்; அதோ ஒரு மரம் தென்படுகிறது; அவ்விடத்தில் சென்று சிறிது நேரம் இளைப்பாறி, பிறகு மேல் நடக்கவேண்டியவற்றை ஆலோசிக்கலாம்; அவ்விடம் போகிறதற்குள் என் கால் பொள்ளிப்போகுமென்று தோன்றுகிறதே; சீக்கிரம் ஓடிப்போகிறேன்; மரத்தை நெருங்கிவிட்டேன்; இம்மரத்து நிழலில் சிறிது நேரம் உட்கார்ந்து கொண்டு என் சிரமத்தை யாற்றிக் கொள்ளுகிறேன். (மரத்தி நிழலில் தன் வஸ்திரத்தை விரித்துக்கொண்டு படுத்துக்கொள்ளுகிறான்).

☞ வி. கோபால ஐயங்கார், பி-ஏ.

சர்வஜித்.

19-வது-அத்தியாயம்.

அதோ முகமாயிருந்த கண்களை உயரத்தூக்கி பிரபுவை நன்றாய்ப்பார்த்துக்கொண்டு, "பிரபுவே, பிரபு ஸுரேந்திரனுக்கு என்ன நேரிட்டதென்பதை நான் அறியேன்" என்றான் ஸர்வஜித். இதைக்கேட்ட புஷ்யமித்திரர் வெடித்துக்கொண்டு வரும்போலிருந்த வியாகூலத்தையடக்கிக்கொண்டு,

"ஏ, ஸர்வஜித், ஸர்வஜித், நான் இவ்வளவு வருஷங்களாக உனக்குச்செய்து
வந்த உபகாரங்களுக்கு இப்படியா பிரதிசெய்வதாக உத்தேசித்திருந்தாய்?"
என்று கேட்டார். இதைக்கேட்டவுடன் தூக்கிப்போடப்பட்டவன்போல்
தேகம்குலுங்கி, "ஐயோ! தெய்வமே!! தங்கள் புத்திரன் காணாமற்போன
தற்கு நான் காரணமென்று சந்தேகிக்கிறீர்களா வென்ன? !! என்று முகம்
சிவக்க, தேகம் நடுங்க, அடக்கமுடியாத வருத்தத்துடன் சொன்னான், "ஏ
ஸர்வஜித், உன் துர்க்குணங்களில் பொய்யையும் ஒன்றாய் வைத்துக்கொள்
ளாதே—" என்று பிரபு மேல் சொல்லப்போக, ஸர்வஜித் பிரபுசொல்வ
தைத் தாங்கமுடியாமல் தேகம் தன் வசமற்று தடுமாறி கீழே விழப்போன
வன், கீழே விழாமலிருக்க மேஜையை இருகைகளாலும் பிடித்துக்கொண்டு
நாக்குளறிச் சொல்லுகிறான், "என் பிரபுவே, என் பிரபுவே, இக்காரியத்தை
நான் செய்ததாக நினைக்கிறீரா? நான் நம்பவில்லை. என்னால் நம்பமுடிய
வில்லை." இதைக்கேட்ட பிரபு அநங்கன் கோபாவேசத்துடன், "சிறுவனே,
உனக்குபகாரியான புஷ்யமித்திரர் துக்கத்திலாழ்ந் திருப்பதைக்காண்கிறாய்.
நீ செய்திருக்கிற காரியத்திற்கு பிராயச்சித்தமாக நீ செய்யக்கூடியதொன்று
தான். அதாவது, பிராணச்சேதமாய் முடிந்திருக்கிற இத்துக்கமான சம்பவ
த்தை ஒளிக்காமல் விஸ்தாரமாய் சொல்லி ஒப்புக்கொண்டு விடுவது தான்,"
என்றான். இதைக்கேட்டவுடன் ஸர்வஜித் திடுக்கிட்டவன்போல், "பிராணச்
சேதமா? பிராணச்சேதம் நடந்திருக்கிற தென்று சொல்வது யார்? பிரபு
ஸுரேந்திரன் இன்னும் வீட்டுக்கு வராவிட்டால், ஒருக்கால் காட்டில் திரி
ந்து கொண்டிருக்கலாம். ஆனால், அவனுடைய இரத்தத்தைச் சிந்தினதாக
என்னைக் குற்றஞ் சொல்வது—அவனைத் துலைத்துவிட்டதாகச் சொல்லது—
அவனுடைய கொலையாளியாக என்னைச்சொல்வது—ஐயோ என்னால் சகிக்க
முடியவில்லையே. என் பிரபுவே, பிரபுக்களே" என்று எல்லாரையும் பார்த்
துக்கொண்டு, "சிலமணிகளுக்குள் பிரபு ஸுரேந்திரன் இங்குவரும்போது
—ஏனெனில் அவன் வந்தே தீரவேண்டும்—அவன் திரும்பிவரும்பொழுது
என்மேல் இக்கொடிய சந்தேகங் கொண்டதற்கு வருத்தப்படுவீர்கள்."
என்று கம்பீரத்துடன் சொன்னான். இதைக் கேட்டுக் கொண்டிருந்த புஷ்ய
மித்திரருக்கு பொறுக்கமுடியாத கோபம் வந்துவிட்டது. " இச்சிறுவன்
கூச்சமில்லாமல் பொய்பேசுவதும் இவனுடைய வெட்கங்கெட்ட பாசாங்
கும் என் பிள்ளையை யிழந்த துக்கத்தைக்கூட மறக்கச்செய்கிறது. ஏ, சர்வ
ஜித் உனக்கு விரோதமாக அசைக்க முடியாத சாக்ஷியும் உருசுக்களும் இரு
க்கும்போது, நீ எவ்விதம் ஒன்றுந்தெரியாதவன் போல் நடிக்கலாம்? அடே,
இவைகள் உனக்கு விரோதமாக மேக கர்ஜனைகளைப் போலப் பேசுகின்றன.
முதலில் சேஷியம்மாள் நீ கத்தியில் கைபோடுவதைப் பார்த்தாள்—" என,
பக்கத்தில் நின்ற சேஷி, "பிரபுவே, ஸர்வஜித் தங்கள் புத்திரன் திட்டுக்களை
பொறுத்துக் கொண் டிருந்தானென்றும், ஒரு நிமிஷம் மாத்திரம் கை கத்தி
யில் பட்ட தென்றும் சொன்னேன்." என்றாள். அதற்குப் புஷ்யமித்திரர்,
"இருக்கட்டும்: தவிர வேறு அத்தாக்ஷிக ளிருக்கின்றன. ஸர்வஜித், நீ
காட்டிலிருந்து வந்து வாசல்காப்போனை விசாரித்தபோது, சந்தேகத்திற்
கிடமான உன்முகக்குறிகளும் பார்வைகளும், உன் உடைகளிலிருந்த களி
மண்ணும் இரத்தக்கரையும, இதோ நிற்கிற காட்டுக் காவலனால் கண்டெடுக்
கப்பட்ட உன் கத்திப்பிடியும், மலையருவியின் கரையில் தேங்கி இருக்கிற
இரத்தமும், ஏ ஸர்வஜித் இவைகளுக்கெல்லாம் நீ என்ன பதில் கூறுகிறாய்?
என்று கேட்டார். [illegible]யில் அடிப்பட்டவன் போல் சிறிது நேரம் பிர

மித்து நின்று, ஸர்வஜித் சொல்லுகிறான், "பிரபுவே, அவ்விஷயங்களும் தோற்றங்களும் எனக்கு விரோதமாய் இருக்கின்றன வென்று ஒத்துக் கொள்ளுகிறேன்—" என்று மேல் சொல்லப் போகுமுன், அப்போஜன மண்டபத்தின் கதவு பொட்டென திறக்கப்பட்டது. ... காவலாட்க ளில் மற்றொருவன் ஒருகையில் பூப்போட்டுச் சித்தரித்த சால்வையையும், மற்றொரு கையில் இறகுடன் கூடிய தொப்பியையும் பிடித்துக்கொண்டு உள்ளே ஓடிவந்தான். அவைக ளிரண்டிலிருந்தும் ஜலம் சொட்டிக் கொண் டிருந்தது. சால்வை கொஞ்சம் கிழிந்திருந்தது, இறகும் ஒடிந்திருந்தது. நான் மீன்பிடிக்க வீசின வலையில் இவைகள் அகப்பட்டன. இவைகள் இவ்விடத் தில் யாருக்காகிலும் சொந்தமா யிருக்கக் கூடுமென்று இங்கு கொண்டுவந் தேன், என்று சொல்லிக் கொண்டு அவைகளை அக்காவலன் மேஜையில் வைத்தான்.

"ஐயோ, இது ஸுரேந்திர னுடைய சால்வையல்லவோ? இது ஸுரேந்திரனுடைய தொப்பியல்லவா? என்று புஷ்யமித்திரர் ஆசனத்தை விட்டு வெருண்டெழுந்துவிட்டு, பிறகு ஆசனத்தில் தள்ளப்பட்டவர்போல் உட்கார்ந்து, "ஏ, ஸர்வஜித், இன்னும் என் பிள்ளையை கொந்தளித்துச் செல் கிற ஆற்றில் தள்ளிவிட்டதை மறுக்கிறாயா?" என்றார்.

"ஐயோ தெய்வமே—பிரபு ஸுரேந்திரா—உண்மைதானா—இப்ப டியா சாகவேண்டும்" என்று தடுமாறிப் பேசிக்கொண்டு, ஸர்வஜித் சாய்ந் தான். சாய்ந்தவன் மேஜையைப் பிடித்துக்கொண்டு, ஏதோ பேசவந்தான். ஆனால் புத்திக்குழப்ப முண்டாய்விட்டது; கண்கள் மங்கிப்போய்விட்டன; ஓவென்று புலம்பிக்கொண்டு தரையில் விழுந்து மூர்ச்சித்து விட்டான்.

இச்சுகமற்ற சிறுவன் மறுபடியும் விழித்துக் கொண்டபோது, தான் மைய்யிருளில் இருப்பதைக் கண்டான். நடந்தசங்கதிகள் ஞாபகம் வரவே அடக்கமுடியாத வேதனையால் அலறிக்கொண்டு கைகளை நீட்டினான். ஈரமு ள்ள சுவரில் கைகள்பட்டன. அடுத்த நிமிஷத்தில் தன் இடுப்பில் சங்கி லியைக் கட்டியிருப்பதையும் தான் வைக்கோலின் மேல் படுத்திருப்பதையு மறிந்தான்.

உடனே எல்லாம் விளங்கி விட்டது. தான் கொலை செய்த குற்றத்திற் குள்ளாகி, விலங்கிடப் பட்டு அநந்தகிரியில் இருட்டறைகளி லொன்றில் அடைபட்டிருப்பதாகத் தெரிந்தது.

20-வது அத்தியாயம்.

முந்திய அத்தியாயத்தில் விவரித்தெழுதிய செய்திகள் லீலாவதியின் காதில் விழவே அவளுக்கேற்பட்ட கடுந் துக்கத்தையும், பயித்தியத்தில் கொணர்ந்து விடும்போலிருந்த ...வேதனைகளையும் ... தெதுரைக்க நம்மிட த்தில் சரியான வார்த்தைகளில்லை. இவ்வளவு விசனமான சங்கதியைத் தெரி விக்கவேண்டிய சங்கடமான வேலை புஷ்யமித்திரரால் சேஷியிடத்தில் ஒப்பு விக்கப்பட்டது. அவளும், மெதுவாய், ஸுரேந்திரன் காணாமற் போனதை யும், ஸர்வஜித் குற்றஞ்சாற்றப்பட்டு இருட்டறையில் அடைப்பட்டிருப்ப

தையும் தெரிவித்தாள்; ஆனால் பாதி வரலாற்றைச் சொல்லுவதற்குள்ளாக லீலாவதி முழுமையையுமறிந்து ஏங்கின குரலுடன் ஹோவென்றலறிக் கொண்டு சேஷியின்மேல் சாய்ந்து மூர்ச்சித்துவிட்டாள். நெடுநேரம் வரை யில் பிரக்ஞையற்றுக் கிடந்த அவளுக்கு ஞாபகம் வருவதற்கு சேஷியம்மாள் எடுத்துக்கொண்ட சிரமத்தையும், பிரக்ஞை வந்தவுடன் அவளைச் சமாதானஞ் செய்ய எடுத்துக்கொண்ட முயற்சிகளெல்லாம் முற்றிலும் பயனற்றுப் போனதையும், ஏக்கமென்னும் சமுத்திரத்தில் லீலாவதி அடிக்கடி ஆழ்ந்ததையும், நாம் இங்கு விவரிக்கமுடியாது; ஏனெனில், இதைப் படிப்போர்கள் அவளது துக்கம் இப்படிப்பட்டதென்பதை வார்த்தைகளாலறிவதைக் காட்டிலும், மனதால் சுலபமாய் நினைத்துக்கொள்ளலாம். அவள் வருத்தம் சிறிது தணிந்தவுடன் சேஷியோடு, சங்கதிகளனைத்தையும் விசாரித்துவிட்டு, சொல்லுகிறாள். "நீ ஸர்வஜித்தை நிரபராதி யென்று உண்மையில் நம்புகிறாயா? அல்லது, என் மனதை திருப்தி செய்ய இம்மாதிரி பேசுகிறாயா? உள்ளதை ஒளிக்காமல் சொல்லவேண்டு" மென்றாள்.

"என் மஹா அருமையான கண்மணியே, என் பிரியத்திற் கிருப்பிடமே," என்று கண்ணீர் சொரியச் சொல்லுகிறாள; "அருமைச் சிறுவனான ஸர்வஜித்தைக் குறித்துத் தீங்கு நினைப்பது உன்னைப்பற்றித் தீங்கு நினைப்பதற்கொப்பாகும். ஆம், அவன் அருமைச் சிறுவன் — அவ்வளவு சாந்தகுணம் — அவ்வளவு கம்பீரம் — கர்வமில்லாதவன், ஆபினும் தனக்குள்ள மரியாதையைக் குறைத்துக்கொள்ளாதவன், ஆ, அப்படிப்பட்டவன் கொலை செய்திருக்கக்கூடுமென்று நினைக்கச் சிறிதும் இடமில்லை. பொறுக்கமுடியாமல் கோபமூட்டப்பட்டு உன் சகோதரனைச் சண்டையில் கொன்றிருந்தாலுங்கூட,—" என்று சொல்லுவதற்குமுன் லீலாவதி, "அதைக்கூட நான் நம்பமாட்டேன். என்தகப்பனார் அவனை விசாரிக்கையில் என் தமையனைப் பற்றி தனக்கு யாதொரு சங்கதியும் தெரியாதென்று ஸர்வஜித் சொன்னதாக நீ சொல்லவில்லையா? சிறிது நேரத்துக்கெல்லாம் ஸுரேந்திரன் வந்தவுடன் தான் நிரபராதியென்பது மற்றவர்களுக்கு வெளியாகுமென்று சொன்னதாக நீ சொல்லவில்லையா? நான் அவன் சொன்னதை நம்புகிறேன். தெய்வம் ஸர்வஜித்தைக் கைவிடுமென்று நான் எண்ணவில்லை. ஐயோ ஸுரேந்திரா, என தருமைச் சுரேந்திரா, இனி உன்னைக் காணமாட்டேனென்பது உண்மைதானா? ஐயோ, உன் முடிவை நினைக்க நினைக்க என் மனம் சகிக்கவில்லையே," என்றழுதாள்.

இப்படி ஆராத்துயரத்திலிருக்கையில் புஷ்யமித்திரர் அவ்விடம் வந்தார். வந்தவர் லீலாவதியின் துக்கத்தைக்கண்டு உருகிப்போய், அவளருகில் வந்து வருத்தத்துடன், "கண்மணியே, ஸுரேந்திரனும் போய்விட்டான். இனி எனக்கு நீதான். உன்னை இனி ஒரு காரியத்திலும் நான் கட்டாயப் படுத்துவதில்லை" என்றார். பிறகு நெடுநேரம் இருவரும் ஒருமிக்க விசனித்துவிட்டு புஷ்யமித்திரர் தன் பெண்ணின் துக்கத்தைத் தணிக்க எண்ணி பின்வரும் ஆறுதலான வார்த்தைகளைச் சொன்னார். "மனிதர்களால் ஈசன் செயலுக்கு மீறி நடக்கக்கூடிய தொன்றுமில்லை" என்றும், "தான் ஒரு பிள்ளையையும் லீலாவதி ஒரு சகோதரனையும் இழப்பது கடினமாயிருந்தபோதிலும், தெய்வம் ஒவ்வொன்றையும் ஏதோ ஒரு நன்மையை உத்தேசித்து செய்கிறதென்பதைத் தவிர நாம் வேறொன்றையும் நினைக்க வழியில்லை

யென்றும்'' மசானனா. [illegible] கதை யாவது பேசவில்லை. லீலாவதியோ தான் ஸர்வஜித் இடத்தில் யாதொரு சந்தேகமுங் கொள்ளவில்லையென்பதைத் தெரிவிக்க ஆவலாயிருந்தாள். ஆனால், தகப்பன் அப்பேச்சை எடுக்காதிருக்கும்போது தனது அபிப்பிராயத்தை வெளியிட கொஞ்சம் அஞ்சினாள். இப்படி ஒரு மணிநேரம் பெண்ணுடன் பேசிவிட்டு, இராத்திரியாய் விட்டபடியால் கையில் ஒரு விளக்கை யெடுத்துக்கொண்டு தன்னறைக்குச் சென்றார்.

21-வது அத்தியாயம்.

இப்பொழுது நடுநிசி; அச்சமயத்தில் அப்பிரதேசம் முழுதும் பெரும் புயலடிக்கவாரம்பித்தது. மடமடவென்று காது செவிடுடும்படி இடித்தது; கண்களைப்பறித்துச் செல்லும்போல் மின்னிற்று; இத்துடன் சோவென்று காற்றும் வீசவே, வானத்தை அனேக விடங்களில் பொத்துவிட்டாற்போல் தாரை தாரையாய் மழை பொழிய ஆரம்பித்தது. இப்படி இடியும் மழையு மதிகரித்து பூமியெல்லாம் வெள்ளம் வந்தாற்போல ஜலம் ஓடிக்கொண்டிருக்கையில், ஞாபகஸ்தம்பத்தினடியில் நம்முடைய காட்டு ஸ்திரீ மழையை யாவது, காற்றையாவது இலக்ஷியஞ் செய்யாமல், கந்தைகளால் மூடப்பட்ட தேகமுழுதும் நனைய, மண்டிபோட்டுக்கொண்டிருந்தாள். இப்படி எவ்வளவு காலம் இருந்திருக்கலாமென்று இவளுக்கே தெரியாது; சமீபத்தில் வந்து கொண்டிருந்த குதிரைக் காலடிகளின் சப்தங் காதிற்படவே திடீரென்று விழித்துக்கொண்டாள். சவாரிசெய்து கொண்டுவந்தவன் அக்குதிரையைத் திட்டிக்கொண்டிருந்தான். ஒரு நிமிஷத்திற்குள் குதிரை சறுக்கி விழுந்தாற் போலும் ஏறியிருந்தவன் தள்ளப்பட்டாற் போலும் சப்தங்கேட்டது. உடனே குதிரை நாலுகால் பாய்ச்சலில் ஓடிவிட்டது. அவளுக்குச் சமீபத்தில் ஒரு மனிதனுடைய பலஹீனமான புலம்பலுண்டாயிற்று. சற்று நேரத்திற்கெல்லாம் அதுவும் அடங்கிவிட்டது. என்ன விபத்து நேரிட்டதோவென்றெண்ணி புலம்பல் வந்த இடத்தை நோக்கி அந்த ஸ்திரீ செல்லுகையில், ஒரு மின்னல் வெளிச்சத்தின் சகாயத்தால் குண்டசீலன் கீழே மூர்ச்சித்துக்கிடப்பதைக் கண்டாள். முதலில் அவன் இறந்துவிட்டானோ வென்று சந்தேகிக்கையில், வேறொரு மின்னலுண்டாயிற்று. அந்த மின்னலைக்கொண்டு அவன் தேகம் அசைவதைப்பார்த்தாள். மலையதிபதிகள் சாராயமில்லாமல் வெளியே போகிறதில்லையென்பது ஞாபகம் வரவே, அவள் அவனது இடுப்பைத்தடவிப்பார்த்து ஒரு தோல் பையிலிருந்து ஒரு சிறு குப்பியையெடுத்து அவன் வாயை மெல்லத்திறந்து மதுவில் கொஞ்சம் ஊற்றினாள். சிறிது நேரத்திற்குள் மூர்ச்சித்துக் கிடந்தவன் குதிரையை வைதுகொண்டே எழுந்தான். மறுபடியும் மின்னல் வெளிச்சம் உண்டாகவே, அந்த ஸ்திரீயைப்பார்த்து, "உன்னை எங்கேயோ பார்த்ததாகத் தோன்றுகிறதே'' என்றான். "ஆம், நீ பார்த்திருக்கக்கூடும். சில வாரங்களுக்குமுன் நீ உன்னாட்களோடு அகந்தகிரியிலிருக்கும் பிரபுக்களோடு சண்டைசெய்யும் போது, சீமாட்டி லீலாவதி காப்பாற்றப்பட்டாளென்று சொல்லவந்தவள் நான்தான்'' என்றாள் அந்தஸ்திரீ.

"ஓஹோ, அப்போது வந்தவளா? அப்படியாகில் உன்மேல் பிரியம் போகக் காரணமில்லை, அதிருக்கக்கட்டும். இப்பயங்கரமான இராத்திரியில்

இ...டில என்ன செய்கிறாய் ?" என்று கேட்க, அவள் "அதே கேள்வி ...கும் உறித்தாகும்" என்று பதில் சொன்னாள்.

"ஓ உனது கேள்விக்கு இதோ பதில். இன்று சாயங்காலம் பக்கத்துத் தலைவர்களி லொருவரைப் பார்க்கப்போயிருந்தேன். நான் திரும்புமுன் இடியும் மழையும் வந்துவிட்டது. இதை ஒரு பொருட்டாயெண்ணாமல், புறப்பட்டுவிட்டேன். சாதாரணமாக சொன்னபடி கேட்கிற என்குதிரை இப்பொழுது இடிமுழக்கத்தைக்கண்டு பயந்து எனக்கடங்காமல் என்னைக் கீழே தள்ளிவிட்டோடிவிட்டது." என்றான்.

"உன்னைப்போல் நான் சிநேகிதர்களைப்பார்க்கச் சென்றதாகச்சொல்ல எனக்கிடமில்லை. நான் பந்துவற்று, நாதனற்று, திக்கற்று, வீடற்று, எல்லா ராலும் சூனியக்காரி அல்லது பைத்தியக்காரி என்று கைவிடப்பட்டு அலை கிறவள். இதுதான் நான் இங்கிருக்கக் காரணம்" என்றாள்.

"அப்படியாகில், என் பின்னோடுவா. மூர்ச்சித்துக் கிடந்த என்னை நீ உயிர்மூட்டினாய். நான் உனக்கு பிரதி உபகாரஞ் செய்யக்கடமைப்பட்டிருக் கிறேன். நீ இக்குளிர் காற்றடிக்கிற இடத்தில் நனைந்த கந்தை வஸ்திரங்க ளோடு இருத்தல்கூடாது" என்று சொல்ல, அவள் "எனக்கும் எங்கேயாகி லும் படுத்துறங்கினால் நானடைந்திருக்கும் சிரமம் நீங்குமெனத் தோன்று கிறது. நீ உன்கோட்டைக்கு என்னை எப்படிக் கூட்டிச்செல்லமுடியும்? என் றால் இப்போது நடக்கச் சக்தியில்லை," என்றாள்.

குண்டலீலன் "சற்றுப்பொறு" என்று சொல்லி, தன்னிடுப்பில் தொங் கிக்கொண்டிருந்த ஒரு கொம்பையெடுத்து அக்காடுமுழுதும் எதிரொலியால் கிடுகிடுக்கும்படி ஊதினான். ஊதின ஐந்தாறு நிமிஷங்கள் வரையில் நிச்சப் தமாயிருந்தது. பிறகு, குதிரைக் காலடிகளின் ஓசையுண்டாகி, ஓடிவிட்ட குண்டலீலனது குதிரை மறுபடியும் அவனண்டையில் வந்து சாதுவாகநின் றது. அதை அத்தலைவன் தட்டிக்கொடுத்து,"நீநல்லகுதிரை என்னைத் தள்ளி விட்டதை மன்னித்துவிட்டேன்" என்று சொல்லி அந்த ஸ்திரீயை குதிரை மேலேறச்செய்து தானுமேறிக்கொண்டு தன் கோட்டையை நோக்கி நாலு கால் பாய்ச்சலில் சென்றுவிட்டான்.

இப்பொழுது இரவில் மணி இரண்டு இருக்கலாம் ; புயல்காற்று மழை யெல்லாம் அடங்கிவிட்டது. லீலாவதியிடமிருந்து விடைபெற்று கையில் விளக்கையெடுத்துச் சென்ற புஷ்யமித்திரருக்குத் தூக்கம் வரவில்லை. பாவம்! "புத்திர சோகம் பொல்லாதது." அநேக வருத்தங்களால் அவர் மனது புண்பட்டுக்கொண்டிருந்தது. தனது புத்திரன் கொடுமையாய்க் கொலை யுண்டா னென்பதைப் பற்றியும், தான் இருபத்து மூன்று வரு ஷங்களாக தன் மக்களுக் கொப்பாகவளர்த்துவந்த ஸர்வஜித் நன்றி விசுவாச மூறமிய யற்றை யெல்லாம் மறந்து ஸுரேந்திரனைக் கொன்று விட்டா னென்பதைக் குறித்தும், அவர் சந்தேகங்கொள்ளவேயில்லை. தன் பெண் ணின் வருத்தத்தையறிந்தபோது வேறொருஎண்ணம் உண்டாயிற்று" உலக கஷ்ட நிஷ்டூரங்களை நன்றாயறிந்து அநுபோகமுள்ள நான் என் பிள்ளை யின் மரணத்தால் இப்படி வருத்தப் படும்போது, பாவம்! ஒன்று மறி

யாத சாந்தமே உருவெடுத்தாற் போலுள்ள லீலாவதியி னுடைய துக்கம் எப்படி யிருக்கக் கூடும்? அவ்வளவு மிருதுவான மனதுடைய அவளை நான் யோசனையில்லாமல் எவ்வளவு வருத்தத்திற் குள்ளாக்கிக் கொண்டுவந்து விட்டேன்?

ஈ. கே. சிவசுப்பிரமணிய ஐயர்.

சிறுவர்களுக்கான கதைகள்.

1. அறிவின் அருமை பெருமை.

கிழக்குத் தேசாதிபதி ஒருவனுடைய மந்திரி ஏதோ குற்றத்திற்காக ஜீவனுள்ளளவும் சிறைச்சாலையில் இருக்கும்படி தீர்ப்புப்பெற்று,ஓர் உன்னத கோபுரத்தின் உயர்ந்த மேன்மாடத்தில் கைதியாயிருந்தான். அப்பொழுது ஒருநாள் ராத்திரி மந்திரியின் மனைவி அம்மாடத்தின் பலகணிப் புறத்தில் கீழேபோய் நின்று தனது கஷ்டத்தை நினைத்துத் தேம்பி தேம்பி அழுதாள். அழுகுரல் கேட்டு, அமைச்சன் "பெண்ணே, நீ யிப்படி தினந்தோறும் உள்ளம் கரைந்து அழுவதிற் பயனில்லை. ஆனால் நான் ஒரு யுக்தி சொல்லுகிறேன், அதின்படி நட, வியர்த்தமாய் இங்கு நிற்காமல் நேரே வீட்டிற்குச் சென்று, உயிருடன் கருவண்டு ஒன்றும், நெய் பலம் ஒன்றும், மெல்லிய பட்டு நூற்பந்து ஒன்றும், முறுக்கு நூற்கழி ஒன்றும், கயிற்றுப்பந்து ஒன்றும், வடச்சுருள் ஒன்றும் தவறுவல் இவைகளனைத்தையும் சேகரித்துக்கொண்டுவா என்று சொல்லி அனுப்பினன். மந்திரி மனைவியாகிய அம்மாது அந்த நிமிஷமே விரைவாய் வீட்டிற்குப்போய் மேற்குறித்த சாமான்களைக் கணவன் சொற்படி மறு நாள் ராத்திரி கோபுரமாடத்தின் புறத்தில் கொண்டுபோய் வைத்து காத்திருந்தாள். அதுகண்டு சிறையிலிருந்த அமைச்சன் எனது பிராணநாயகி, நீ கொண்டுவந்திருக்கிற வண்டின் சிரசில் ஒரு துளி நெய்யைத் தடவி, பட்டுநூலின் ஒருமுனையை அதன் இடுப்பிற்கட்டி, வண்டைக் கோபுரமதிலில் தலைநிமிர்ந்திருக்க வைத்துவிடு என்று சொல்ல, அவள் அதேபிரகாரம் செய்தாள். அவ்விதஞ் செய்தவுடனே அவ்வண்டு தலையிற் பூசிய நெய்யினுடைய மணத்தை பிடித்துக்கொண்டு கோபுரம் ஏறி, மந்திரி சிறையிருந்த காவல் அறையின் பலகணியிற் சேர்ந்தது. சேரவே, வண்டின் இடுப்பிற்கட்டிய பட்டு நூற்பந்தின் ஒருநுனையை மந்திரி கைக்கொண்டு, அதன் மறுமுனையில் முறுக்கு நூலின் ஒருமுனையையும் கெட்டியாய் முடிந்துவிடக் கற்பித்தான். அவள் அப்படிச் செய்தாள். அதன்பின் மந்திரி அவைகளை ஒவ்வொன்றாய் இழுத்து, பலமான வடத்தைப்பிடித்து, பலகணிக்கு இட்டிருந்த இரும்புக்கிராதிக் கம்பியில் இறுகக்கட்டி, அதன் உதவியால் பலகணியின்று மனபயமில்லாமல் இறங்கி அடித்தறை சேர்ந்து ஓடித்தப்பினன். இது கற்பிதக்கதையா யிருந்தாலுமிருக்கும். ஆனால் 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பதுபோல, புத்தி சக்தி உள்ளவர்கள் தன் விவேகத்தினால் சமயத்தில் எந்தக் காரியத்தையும் உபாயமாய் நினைந்தபடி அணுவும் தவறாமல் சாதிக்க மாட்டுவார்கள் என்று இக்கதையினால் தெரியவருகின்றது.

2. எனக்கு உழைப்பவன் யாவன்?

எளிய கிழவி ஒருத்தி பகலெல்லாம் பாடுபட்டு உழைத்து ஒரு நாள் சாயங்காலம் தன்குடிசை வாயிலில் உட்கார்ந்திருக்கும்பொழுது "நான் இப்படி வியர்க்க வியர்க்க ஊருக்கு வருந்தி உழைக்க, எனக்கு உழைப்பவர் எவரும் இல்லாதிருப்பது என்ன அநியாயம்" என்று பெருமூச்சுவிட்டுச் சொன்னாள். அவ்வேளையில் அருகாமையிற் சென்ற புத்திமானாகிய அயலான் ஒருவன் அவள் சொற்களைக் கேட்டு, பின்வருமாறு அவளுக்குச் சில புத்திகளைப் புகட்டினான்:—"பாட்டி பாட்டி, உனக்கு உழைப்பவர் ஒருவரும் இல்லையென்று சொல்லுகிறாய்? அது முழுதும் தப்பு. 'நீ இப்பொழுது சாதம் சமைக்கப்போகிறாய் அல்லவா? நிலங்களில் நெல்விதைத்து, விளைந்த பின் அறுத்து, அரிசியைச் சுமைசுமையாகக் கட்டி எடுத்துக்கொண்டுபோய் பேர்போட்டு அடித்துத் தூற்றக் கடைக்கு விற்கக் கொண்டுபோனவர்கள் யார்? மிளகாய்-மிளகு-சீரகம்-கடுகு-கொத்தமல்லி-முதலிய சரக்குகளை விளைவித்தவர்கள் யார்? விளைந்த உப்பை ஊர் ஊராய்க் கொண்டுவந்துசேர்த்தவர் யாவர்? நீ காய்கறி அரியும் கத்தி ஒருவரும் செய்யாமல் தானே உண்டானதா? பூமிக்குள் விளைந்த இரும்பை வெட்டியெடுத்தவர்கள் எவர்? பின்பு அதை உலையிலிட்டுக் காய்த்து அடித்துக் கத்தி செய்தவர்கள் யாவர்? சாதம் சமைக்கும் மட்பாண்டம் வனைந்தவள் நீதானா? நீ உடுத்தியிருக்கும் துணி யாருநெய்தது? 'வெகு தூரம்போகவேண்டாம், நீயிருக்கும் குடிசை யார் கட்டியது? "இந்தச் சிறிய குடிசைக்குள் நீவைத்திருக்கின்ற போஜன பதார்த்தம், துணி மணி, சாமான் தட்டுமுட்டு இவைகளை உனக்காக அலுப்பற்று மனப்பூர்வமாய் வருந்தி உழைத்து உற்பத்தி செய்த தொழிலாளர் எல்லாரையும் பெயர் பெயராக எடுத்துக்கூற எவ்வளவோ நாட்கள் செல்லுமே. ஆதலின் கிழவியே உனக்கு உழைப்பவர் எவரும் இல்லையேயென்று யோசிக்காமல் ஒருபொழுதும் சொல்லாதே என்று சொல்லிப் போயினான்.

3. என்ன முகாந்தரத்திற்காக?

சிறிது காலத்திற்கு முன் ஒரு பெரியவர் பிள்ளைகள் கற்கும் பள்ளிக்கூடத்திற்போய் சிறுவர்களைப் பார்த்து இளமாணாக்கர்களே, இச்சமயத்தில் உங்களை இரண்டு கேள்விகள் கேட்க விரும்புகிறேன். ஒரு கேள்விக்கு நீங்கள் எல்லாரும் உத்தரஞ் சொல்லுவீர்கள். மற்றக் கேள்விக்கு மறுமொழி சொல்ல உங்களால் முடியுமோ முடியாதோ அறியேன். ஆனால் கூடிய வரையிலும் யோசித்துப் பாருங்கள் என்றார். "முதற்கேள்வி, உங்களை சிருஷ்டித்தவர் யாவர்? மேற்குறித்த பெரியவர் இந்த வினாவை கேட்டவுடன் இளைஞர்கள் "கடவுள்" என விடை கொடுத்தார்கள். இரண்டாவது கேள்வி யாதென்று எண்ணுகிறீர்கள்? "என்ன முகாந்திரத்திற்காக" நல்லது, இந்தக் கேள்விக்கு தகுந்த விடை உங்களால் கொடுக்கமுடியுமா? பகவான் உங்களை சிருஷ்டித்த முகாந்திரம் இன்னதென்று உங்களால் திட்டமாய் அறிவீர்களா? இதற்கு உத்தரம் இன்னதென்று சொல்லத்தகுமென்று உணராமல் சிறுவர்களெல்லாம் மௌனஞ் சாதித்தார்கள். ஆனால் மிகவும் புத்திக்கூர்மையுள்ள ஒரு சிறுவன்; "நல்லவர்களா யிருக்கவும், ஜீவனுள்ளளவும் நன்மைசெய்யவும் வேண்டுமென" இரண்டாவது கேள்விக்கு மறுமொழி சொன்னான். பெரியவர் கேட்டு மிகவும் சந்தோஷப்பட்டு அவ்விளைஞனுக்கு தகுந்த இனம் அளித்தார்.

ஓர் மாது.

நமது பார்வைக்கு வந்த புஸதகம்.

(1) ஜீவவர்க்க போதினி: முதற்பாகம்.

இப்பொழுது ஐரோப்பா கண்டத்தில் பற்பல தேசங்களில் பிள்ளைகளுக்கு எவ்விதம் போதித்து வருகிறார்களோ அதே மாதிரி இங்குள்ள பாடசாலைகளிலும் பற்பல விஷயங்களைச் சுலபமாக போதித்துவர கல்வி இலாகாவைச் சேர்ந்தவர்கள் முயன்று வருகிறார்கள். பிள்ளைகளுக்கு ஒவ்வொரு வஸ்துவை உற்றுப் பார்க்கும் சக்தி மிகுதியாக யுண்டு. ஆனால் அவ்வித சக்தியையும் விருத்திசெய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் சித்திரம் எழுதல் இயற்கைப் பொருளின் விசேஷங்கள், ஜீவ வர்க்கத்தின் அற்புதங்கள் முதலியவைகளைச் செவ்வனே பிள்ளைகள் அறியுமாறு அநேக உபாத்தியாயர்கள் போதிக்க முயன்று வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு எளிய நடையில் எழுதப்பட்ட புஸ்தகங்கள் கிடைப்பது அரிதாகயிருந்தாலும் இப்பொழுது சில கனவான்கள் சிலபுஸ்தகங்களை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்து எளிய நடையில் யாவரும் அறிந்து கொள்ளும்படி பிரசுரித்து வருகிறது நற்காலமாகத் தோன்றுகிறது. ம-m-m-ஸ்ரீ வி. ஆர். துரைசுவாமி சாஸ்திரியா ரவர்கள், எம்-ஏ, எல்-டி. எளிய நடையில் ஜீவவர்க்க போதினி என்ற அரிய புஸ்தகத்தைப் பிரசுரித்திருக்கிறார்கள். மீன் இனம், தவளை இனம், ஊர்வன, பறவைகள், முதலிய வைகளைப் பற்றி வெகு தெளிவாகவும் விரி வாகவும் எழுதப் பட்டிருக்கின்றன. அழகான படங்களும் இதில் அடங்கியுள. இப்புஸ்தகத்தை உபாத்தியாயர்கள் படித்து தங்கள் மாணுக்கர்களுக்குப போதித்து வந்தால் அவர்கள் அறிவு விருத்தியடையு மென்பதற்குச் சந்தேக மில்லை. மேலும் இவ்வித புஸ்தகம் பெண்மணிக ளிடத்தி லிருக்க வேண்டிய தவசியமே. இவ்வித அருமையான புஸ்தகத்தின் விலை அணு 12. வேண்டுவோர் ரிப்பன் புஸ்தகச் சாலைக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

நமது துண்டு புஸ்தகம்.

மின்னலும், இடியும், காற்று மழையும் உண்டாகும்பொழுது பிரான்ஸ் தேசத்திலுள்ள குடியானவர்கள் அடிக்கடி அதிக புகையுண்டாகும் படி நெருப்பு வைத்துக் கொள்ளுகிறார்களாம். இப்படிச் செய்வதால் அவர்கள் இடிக்கும், மின்னலுக்கும் தப்பித்துக் கொள்ளலா மென்ற நம்பிக்கையுடையவர்களாம். புகையானது மின்சாரத்தைக் கிட்ட அண்ட இடங்கொடாமல் அதை வெகுதூரம் கொண்டுபோய் விடுமென்று சொல்லப்படுகிறது.

ஒரு ஈ 1000 முட்டைகளை யிடுமாம், ஈக்க ளிருக்கும் காலத்தில் ஒன்றிலிருந்து 1000 முட்டைகள் உண்டாகும். இவைகளிலிருந்து 25,000,000 ஈக்களாக பெருகுமாம்.

ஆப்பிரிக்கா கண்டத்தில் இப்பொழுது 5 கோடி ஜனங்க ளிருக்கிறார்களாம். உலகத்தில் 130,000,000 பருத்தி இராட்டினம் இருக்கின்றன. இங்கிலாந்தில் மாத்திரம் 55, 000, 000 யிருக்கின்றன, பிராஸில் தேசத்தில் தென்னைமரங்கள் 600 வருடம் வரையில் வளர்ந்து வருகின்றன வாம்.

தீக்குருவியின் முட்டை மூன்று பவுண்டு நிறையுள்ளதா யிருக்கும், 24 கோழி முட்டைகளைப் புசித்தால் எவ்வளவு பலமுண்டோ அவ்வளவு பலம் தீக்குருவியின் ஒரு முட்டைக்கு உண்டாம்.

ஜர்மனியில் பிரதிவருடத்திலும் சரியாய் போஷிக்கப் படாத கைக்குழந்தைகளில் 200, 000 பேர் இறந்து விடுகின்றனவாம்.

நமது தேசத்தில் குழந்தைக ளுடைய மழல் சொற்களைக் கேட்டு ஆநந்திக்கும் வழக்க மாத்திர முண்டு. ஆனால் அமெரிக்கா இங்கிலாந்து முதலிய விடங்களிலுள்ள பத்திரிகைகளில் குழந்தைகள் பேசும் வார்த்தைகளைக்குறித்து எழுதினால் ஜனங்கள் மிக்க ஆவலுடன் அவ்வினிய வார்த்தைகளைப் படிப்பார்க ளாம்.

விடுகதை வினா.

1 ஈரிரண்டு கம்பமுண்டு மண்டபமுமல்ல
இலைபறித்து குலைவளர்ப்பான் வாழையுமல்ல
கோரக்கொம்புதனை யேந்தும் வேடனல்ல
கூசாமலே புடைக்கும் முறமுமல்ல
தாரைகுழை மிகவிருக்கும் ஜலதாரையல்ல
தட்டிக்கறந்தாள் விளக்கும் துடப்பமல்ல

2 பார்த்து முகம் பல்காட்டும் கண்ணாடியல்ல
பசங்களிடம் சேஷ்டை செய்யும் வேசியல்ல
கூத்தாடி பணம் பரிக்கும் தாசியல்ல
குந்தி சற்று மிருக்காது நாயுமல்ல
போற்றுகின்ற கொடியாகும் புனலுமல்ல
போர்புரிந்து ஜயமடையும் விஜயனல்ல

சாற்றுகின்ற இக்கதையின் பொருளைச் சொன்னால் சந்தேகமன்றியவர் சமர்த்தரேதான்.

☞ எஸ்.ஜானகியம்மாள்.